விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 07 செவ்வாய்க்கிழமை (20.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 122

ரா
ம்
கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

RAMCO

## மொராக் துறைமுகத்தில் நின்ற கப்பலில் இருந்த அகதிகள் வெளியேற்றப்பட்டனர்

(கொழும்பு)

இந்தோனிஷியாவின் மொராக் துறைமுகத்தில் கப்பலிலிருந்த 120 இலங்கை அகதிகள் பஸ்களில் ஏற்றப்பட்டு இடம்மாற்றப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாகப் படகில் செல்ல முற்பட்ட சமயம் கரையோரக் கண்காணிப்பாளர்களால் இவர்கள் மொராக் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அவுஸ்திரேலியாவுக்கான தமது அகதி அந்தஸ்து வழங்கப்படும் வரை கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக கப்பலிலிருந்து இறங்க மறுத்த இவர்கள் தற்போது கப்பலில் இருந்து இறங்க இணக்கம் தெரிவித்தனர்.

இதனையடுத்து நேற்று திங்கட்கிழமை 120 இலங்கை அகதிகள் கப்பலிலிருந்து இறக்கி பஸ்களில் *(16 ஆம் பக்கம் பார்க்க)*

## பொன்சேகாவுக்கு எதிரான விசாரணை இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராக நேற்றுக் கூடிய இராணுவ நீதிமன்ற் விசாரணைகள் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றம் நேற்றுக் கூடிய போது சரத் பொன்சேகா சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரியன்சி அரசகுலரத்ன அடிப்படை எதிர்ப்பை வெளியிட்டார்.

இராணுவச் சட்டத்தின்படி இராணுவத் தளபதிகள் இராணுவ நீதிமன்றத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல என அவர் கூறினார். அத்துடன் தரத்தில் உயர் பதவியில் உள்ள ஒருவரைக் கைது செய்ய இராணுவத் தளபதிக்கு அதிகாரமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒருவர் இராணுவச் சட்டத்திற்கு உட்பட்டவராக இருந்த *(16 ஆம் பக்கம் பார்க்க)*

# தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வலியுறுத்தும் எண்ணம் மாறவில்லை

## நோர்வே அரசு தெரிவிப்பு

(ஒஸ்லோ)

**அண்மையில் நடைபெற்ற தேர்தல்களில் இலங்கை அரசு பெரும் வெற்றியைப் பெற்ற போதும் தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வை அவர்கள் முன்வைக்க வேண்டும் என்ற எமது கொள்கைகளில் மாற்றங்கள் எதுவும் இல்லை என நோர்வே தெரிவித்துள்ளது. இது தொடர்பில் நோர்வேயின் நாடாளுமன்றத்தில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோனாஸ் கார்ஸ்ரோர் இனால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.** *(16 ஆம் பக்கம் பார்க்க)*

## சபாநாயகரை தெரிவது குறித்து மகிந்த-ரணில் நேற்றுச் சந்திப்பு

### சமல் ராஜபக்ஷ சபாநாயகர்?

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையில் ஜனாதிபதி மாளிகையில் நேற்று விசேட பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் ரணில் விக்கிரமசிங்க இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவு, இது வழமையான சந்திப்பெனவும் சபாநாயகரைத் தெரிவு செய்வது குறித்து இதன்போது பேசப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

சமல் ராஜபக்ஷவை சபாநாயகராகத் தெரிவு செய்யத் *(16 ஆம் பக்கம் பார்க்க)*

## பலத்த பாதுகாப்புடன் இன்று நாவலப்பிட்டியில் மீள் வாக்கு

### நள்ளிரவில் முடிபு வெளியாகும்

(கொழும்பு)

கண்டி மாவட்டம் நாவலப்பிட்டித் தேர்தல் மீள் வாக்களிப்பு இடம்பெறவுள்ள 37 வாக்களிப்பு நிலையங்களில் இன்று காலை 7 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை வாக்களிப்பு இடம்பெறுவதற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

நாவலப்பிட்டித் தேர்தல் தொகுதியிலிருந்து 50 ஆயிரத்து 100 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் சுமார் 32 ஆயிரம் பேர் சிங்களவர் என்றும் 14 ஆயிரம் பேர் தமிழர்கள் என்றும் சுமார் 4 ஆயிரம் பேர் முஸ்லிம்கள் என்றும் தெரிவிக்கப்படுகின் றது.

இன்றைய வாக்களிப்பில் ஈடுபடுகின்ற வாக்காளர்களின் இடது கையின் நடுவிரலில் மை பூசப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது நாவலப்பிட்டியின் 37 வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட முறைகேடுகளால் இவற்றின் வாக்குப் பதிவு ரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இன்று மீள்வாக்களிப்பு இடம் பெறுகின்றது. (ச-5,9,14)

உள்ளே...

கொழும்பு றோயல் கல்லூரியின் ஆசிரியர் குழாம் தயாரித்த க.பொ.த. உயர் தர மாணவர்களுக்கான

கணக்கீடு

பாட மாதிரி வினாத்தாள்

## 'இனி எங்கள் அகராதியில் ஆயுதமே இருக்கமாட்டாது'

### உருத்திரகுமாரன் செவ்வி

(கொழும்பு)

ஆயுதப் போராட்டம் என்பதோ, வன்முறை வழியோ இனி எங்கள் அகராதியில் கிடையாது. ஈழத் தமிழர்கள் வாழும் பல்வேறு நாடுகளின் சட்ட திட்டத்தை மதித்துச் செயற்படுவோம்.

சட்டவிரோதமாக எதையும் செய்ய மாட்டோம். இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசு பற்றி இந்திய வார சஞ்சிகையான ஜூனியர் விகடன் இதழுக்கு விசுவநாதன் உருத்திரகுமாரன் வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவர் வழங்கியுள்ள சில நிமிட செவ்வியில் தெரிவித்துள்ளதாவது,

**கேள்வி:-** தேர்தல் பணி எப்படிப் போகின்றது.

**பதில்:-** இந்தத் தேர்தலில் உலகெங்கும் உள்ள விடு *(16 ஆம் பக்கம் பார்க்க)*

## பார்வதிஅம்மா திருப்பப்பட்டமைக்கு தமிழகச் சட்டசபையில் காரசாரம்!

### அவரை அனுமதிக்க கலைஞர் இணக்கம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தாயார் பார்வதிஅம்மாள் திருப்பி அனுப்பப்பட்டமை தொடர்பாக நேற்றுத் தமிழக சட்ட சபையில் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

முக்கிய எதிர்க்கட்சிகள் கவனயீர்ப்புப் பிரேரணை ஒன்றினை முன்மொழிந்திருந்தன. வைத்திய சிகிச்சைக்காக வந்த 80 வயதான மூதாட்டி திருப்பி அனுப்பப்பட்டமை தொடர்பில் கலைஞர் கருணாநிதி பதில் கூற வேண்டும் என அவர்கள் குரல் எழுப்பினர்.

இந்த நிலையில் கவனயீர்ப்புப் பிரேரணை முடிபில் பதிலளித்த முதலமைச்சர் கருணாநிதி மேற்படி பார்வதிஅம்மாள் வருகை தருவது தொடர் *(16 ஆம் பக்கம் பார்க்க)*

## வட மாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் துணுக்காயில் கலாசார விளையாட்டு விழா

(துணுக்காய்)

வடக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத் தமிழ், சிங்கள புத்தாண்டு கலாசார விளையாட்டு விழா இன்று செவ்வாய்க் கிழமை துணுக்காய் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இத்தகவலை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் வட மாகாண தமிழ், சிங்களப் புத்தாண்டின் கலாசார விழா இன்று செவ்வாய்க்கிழமை துணுக்காய் மத்திய கல்லூரியில் முழு நாள் நிகழ் வாக நடைபெறுகின்றது.

வடக்கு மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின்செயலாளர்எல்.இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில், வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார்.

இவ்விழாவில்அனைத்துஆசிரியர்களையும் மாணவர்களையும்தவறாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய்க் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் கேட்டுள்ளார். (ச-5)

## ஆட்டோ மோதியதில் சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நீர் எடுப்பதற்காக வீதிக்கு குறுக்கே ஓடிய சிறுவனை வேகமாக வந்த ஆட்டோ மோதியதில் படுகாயமடைந்துள்ளான்.

நேற்று முன்தினம் மாலை கோப்பாயில் இடம் பெற்ற இவ் விபத்தின் போது அதே இடத்தைச் சேர்ந்த சங்கர குகன் (வயது 13) என்பவரே காலில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-30)

## இருவேறு கத்திக்குத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கத்திக்குத்துக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுதுமலை தெற்கு சாவல்கட்டைச் சேர்ந்த எம்.அன்பழகன் (வயது 30) என்பவரே காயமடைந்துள்ளார்.

குடும்பத் தகராற்றின் போது இவரது மைத்துனரே இவரைக் கத்தியால் குத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உறவினரின் ஒரு வரின் கத்திவெட்டுக்கிலக்காகிய குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றசம்பவத்தில்வட்டுக்கோட்டையை சேர்ந்த நாக முத்துசிவராஜா (வயது 49) என்பவரே காயமடைந்த வராவார்.

வீட்டில்நின்றிருந்தவேளை கத்தியால் வெட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-14,30)

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

வடமாகாண சுகாதார திணைக்களத்தில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் மருந்துக்கலவையாளர் பயிற்சி நெறிக்கு மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்யும் பொருட்டு வடமாகாணத்திலுள்ள தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிபுத் திகதி 15.05.2010 ஆகும். மருந்து கலவையாளர் பயிற்சி நெறிக்கு க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ் / சிங்கள மொழி, கணிதம், விஞ்ஞானம் உள்ளடங்கலாக மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் மொத்தமாக நான்கு பாடங்கள் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. (உ/த) பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் 3 பாடங்களில் சித்தியடைந்திருந்தல் வேண்டும்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பயிற்சி நெறிக்கு க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ் / சிங்கள மொழி, கணிதம், விஞ்ஞானம்உள்ளடங்கலாக மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஆங்கிலம் உட்பட மொத்தமாக (இரண்டு அமர்வுகளிற்கு மேற்படாத வகையில்) 06 பாடங்கள் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த. (உ/த) பரீட்சையில் விஞ்ஞானப்பிரிவில் உயிரியல் அல்லது இணைந்த கணித பாடத்தில் திறமைச் சித்தியுடன் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தேவையான விபரங்களையும் படிவங்களையும் யாழ்.பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனையிலும் அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்தவிண்ணப்பப்படிவங்களை பிராந்திய பணிப்பாளர் பணிமனை, சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம் என்றமுகவரிக்கு 15.05.2010 இற்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும். (ச)

## கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்றோர்

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு யாழ். பிராந்திய மலேரியா தடைப்பகுதியால் நடத்தப்பட்ட கட்டுரை, சித்திரப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம்.

**கட்டுரைப்போட்டி**

1ஆம் பரிசு– திருநாவுக்கரசு பிரணவன், 12 சி ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை, 2ஆம் பரிசு– ஜெயசேகரம் டென்சி, பாலம் இல்லம், கோப்பாய் தெற்கு, கோப்பாய், 3ஆம் பரிசு–க.குலநாயகம் விக்ரோரியா கல்லூரி, சுழிபுரம்.

**சித்திரப் போட்டி**

1ஆம் பரிசு–செ.ஜெகன் பாலசிங்கம் விடுதி, யாழ். பல்கலைக்கழகம், 2ஆம் பரிசு –சண்முகம் நிருபராஜ் பாலசிங்கம் விடுதி, யாழ். பல்கலைக்கழகம், 3ஆம் பரிசு– அருளம்பலம் பிரபாகரன் திருநெல்வேலி. (ச)


## பதவி வெற்றிடம்

| | |
|---|---|
| அபிவிருத்திக் கிளை | : பருத்தித்துறை |
| பதவி | : பிரதேச விற்பனை ஒருங்கிணைப்பாளர் (Area Sales Organiser) |
| குறைந்த பட்ச தகைமை | : G.C.E (A/L) மற்றும் காப்புறுதித் துறையில் மூன்று ஆண்டுகள் அனுபவம் |
| அனுகூலம் | : மாதாந்த அடிப்படைத் தொகையுடன் கூடிய மேலதிக கொடுப்பனவுகள். (வணிக செயற்பாட்டின் அடிப்படையில்) |

விண்ணப்பதாரர்கள் தங்களது சுயவிபரக் கோவையை 26.04.2010 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தொலைநகலில் / அல்லது நேரடியாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

LIC
The Hands that Protect
Life Insurance Corporation (Lanka) Ltd.

**Marketing Manager - LIC (Lanka) Ltd.**
29/2, Sharnell Building,
Visaka Road, Colombo- 04
Fax No: 011 – 2590495.

(சி-127)



# Network Engineer

**Government Scholarship**

- System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
- வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.
- USA,UK பல்கலைக்கழகங்களில் Master Degree
- *Carrier Guidance, Student Visa, Work Permit
- செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்கள்

**Per Module - 15000/= 3800/=**

Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்

Free Diploma in Hardware Technology-DHT, INTERNATIONAL COMPUTER DRIVING LICENCE-ICDL

இச்சலுகை இன்னும் சில நாட்கள் வரை மட்டுமே.

MCS Supported By UNDP/JRRP T.P-772395895
324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில் யாழ்ப்பாணம்

(சி-130)



## முகாமைத்துவ வேலைவாய்ப்பு

கனேடியன் கிளை நிறுவனமொன்றிற்கு முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை.
தகைமை: G.C.E. O/L, A/L
தொடர்புகளுக்கு:
021-4900350
021-4900001
021-4905001

(1218)



## வீடு விற்பனைக்கு

நல்லூர் கோவில் சுற்றாடலில் யாழ். மாநகரசபை எல்லைக்குள் கல்வி வலயத்திற்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட அழகான வீடு உடன் விற்பனைக்கு.
தொடர்பு: 0777432645
எனது பக்கம் தரகர் தேவையில்லை.

(1217)



## காணி விற்பனைக்கு

இல.43 அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுண்ணாகம் 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் கதைக்கலாம்.
Dr.R.கனகலிங்கம் 0779522105
Mr.சி.தனஞ்சயன் 0714102174
Mrs.ச.ஜெயபாலன் 0771622770

(1212)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 08 11 1961



இறப்பு 20 03 2010

### அரியதாஸ் கிருபாரஞ்சினி

(நீர்வேலி)

எங்கள் இல்லத்தின் ஒளிவிளக்காய்
இருந்து தன்னையே உருக்கி எம்மையெல்லாம்
வாழவைத்த அன்புத் தெய்வமே!
நீ எங்கு சென்றாலும் உங்களை யாம் மறவோம்
எமது இல்லத்தில் அணையாத தீபமாக
இருந்து எமக்கு வழிகாட்டுவாய்!

20.04.2010 செவ்வாய் இன்று காலை 7.00 மணிக்கு நீர்வேலி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலி ஒப்புக் கொடுத்தலிலும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

உம் பிரிவால் துயருறும்
சித்தப்பா, அன்ரி.

(1216)



UNION BANK®

# VACANCIES

Union Bank of Colombo Limited has in its strategic redirection determined the need to integrate with development policies of the Country. In its rapid expansion plans the Bank intends increasing its branch network and broadening the scope of banking and financial services to its growing clientele.Accordingly the Bank requires to recruit staff for the following vacancies.

## Assistant Manager-Vavuniya Branch

Candidates must have at least 5 years experience at the executive level in a Bank having covered overall banking operations ,credit and other related areas.
They must have a flair for excellent customer relations with the ability to assist in business development activities.

## Officers - Chunnakam & Mannar Branches

Candidates must have thorough knowledge of banking operations including the process of cash management together with overall knowledge in banking.
Hands on experience of at least 3-5 years in a Bank is necessary.
Applications must be forwarded with names of two non -related referees within 7 days of this advertisement to reach the following address.The post applied for must be marked at the top left hand corner of the envelope.

**Vice President ,**
**Human Resources,Admin & Business Support,**
**Union Bank of Colombo Ltd ,**
**15 A ,Alfred Place ,**
**Colombo -3.**

(C-129)



## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**பாலசிங்கம் ஆண்கள் விடுதி உணவகம்–திருநெல்வேலி**

மேற்படி உணவகத்தை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 2010.05.05ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணமாக ரூபா 1000/- உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 200/- உம் தனித்தனியாக பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உணவகக் கேள்வி" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நலச் சேவைகள் கிளையில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி-128)

# இன்று ஒரு தகவல்

## படிப்பும் பண்பாடும்

ஒரு ஊரில் சோமநாதர் என்று ஒரு பெரியவர் இருந்தாராம். மிகவும் நல்லவர்.

அவரிடம் பணமும் இருந்தது. அத்தோடு குணமும் இருந்தது. மிகவும் அபூர்வம் தானே!

தர்மசிந்தனை உள்ளவர். நாலு பேருக்கு நம்மால் முடிந்ததை செய்ய வேண்டும் என்று நினைப்பவர்.

அவர் ஒருநாள் இரண்டு பண்டிதர்களை வீட்டுக்குக் கூப்பிட்டு அவர்களைக் கௌரவிக்க வேண்டும் என்று நினைத்தார்.

ஞானபண்டிதர், ராம பண்டிதர் என்ற இருவரையும் வீட்டுக்கு அழைத்தார்.

அவர்களும் ஒத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். இந்தப் பெரியவர் அவர்கள் இருவரையும் மிகவும் அன்போடு வரவேற்றார். கூப்பிட்டு உட்காரவைத்து விருந்துக்கு ஏற்பாடு செய்தார்.

அதற்குள், அந்த இரண்டு பண்டிதர்களில் ஒருத்தர் நான் முதலில் போய் குளித்துவிட்டு வருகிறேன் என்று புறப்பட்டார். அவர் போன பின் உட்கார்ந்திருந்த மற்றவரிடம் சோமநாதர் பேச்சுக் கொடுத்தார்.

“இப்ப குளிக்கப் போயிருக்கிறாரே, உங்கள் கூட்டாளி ஞானபண்டிதர், அவர் பெரிய வித்துவான் – தத்துவஞானி என்று ஊர் உலகமெல்லாம் பேசிக் கொள்கிறார்களே” என்றார்.

அப்படி அவரைப் புகழ்ந்து பேசியதை இவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

“ஊர் உலகத்துக்கு என்ன தெரியும் அவரைப்பற்றி? அவர் ஒரு பெரிய வித்துவான் என்று சொல்லிக் கொள்ளும் அளவுக்கு அவரிடம் என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. எல்லாம் வெறும் வேஷம். உண்மையைச் சொல்லப் போனால் அது ஒன்றும் தெரியாத மாடு” என்று பொரிந்து தள்ளி விட்டார்.

அந்தப் பெரியவர் இவர் இப்படிச் சொல்வார் என்று எதிர்பார்க்கவில்லை. மனம் நொந்து போய் பேசாமல் உட்கார்ந்திருந்தார்.

கொஞ்ச நேரத்தில் குளிக்கப் போயிருந்த ஞானபண்டிதர் திரும்பி வந்தார். அவர் வந்ததும் ராமபண்டிதர் குளிக்கப் புறப்பட்டார். இவர் போன பின் ஞானபண்டிதரிடம் பேச்சுக் கொடுத்தார் அவர்.

“எங்க.. உங்க கூட்டாளி பெரிய ஞானி போல இருக்கே?” என்றார்.

இதைக் கேட்டதும் அவருடைய முகம் வாடிப்போய் விட்டது.

“யார் ஞானி? அவரா ஞானி? அவரைப் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது போல இருக்கு அது ஒரு மோசமான கழுதை” என்றார்.

இதைக் கேட்டதும் அந்தப் பெரியவர் மிகவும் நொந்து போனார். பதில் எதுவும் சொல்லவில்லை. பேசாமல் இருந்தார்.

சாப்பாட்டு நேரம் வந்தது.

குளிக்கப் போயிருந்தவரும் வந்து சேர்ந்தார்.

அந்தப் பெரியவர் அவர்கள் இருவரையும் கூட்டிக்கொண்டு போய் உட்கார வைத்தார். அவர்களுக்கு முன்னால் இரண்டு தட்டை வைத்தார். ஒரு தட்டில் புல்லும் இன்னொரு தட்டில் தவிடும் இருந்தது. இதைப் பார்த்தவுடன் அந்தப் பண்டிதர்களுக்குக் கோபம் வந்துவிட்டது.

“எங்களை என்ன மிருகம் என்று நினைத்துவிட்டீர்களா? எங்களை இப்படி அவமானப்படுத்துவதற்கா உங்களுடைய வீட்டுக்குக் கூப்பிட்டீர்களா?” என்று சொல்லி சத்தம் போட ஆரம்பித்தனர்.

“ஐயையோ... அப்படியெல்லாம் நினைத்து விடாதீர்கள். நீங்கள் இரண்டுபேரும் பண்டிதமணிகள். உங்கள் வார்த்தைக்கு மரியாதை கொடுத்தேன் அவ்வளவு தான்!

நீங்கதான் அவரை மாடு என்றீர்கள். அவர்தான் உங்களை கழுதை என்றார். மாடும் கழுதையும் என்ன சாப்பிடுமோ அதைத்தான் உங்கள் முன்னால் வைத்தேன். முதலில் நான் உங்களை பண்டிதர்கள் என்று நினைத்து விருந்துக்கு ஏற்பாடு செய்தேன். நீங்கள் இங்கே வந்த பிறகு தான் நீங்கள் யார் என்பதை உங்கள் மூலமாகவே புரிந்து கொண்டேன்.

அதன்பின் அதற்குத் தகுந்த மாதிரியான விருந்தை ஏற்பாடு பண்ணினேன். அவ்வளவு தான்!” என்றார்.

இந்த உலகத்தில் நாமெல்லாம் அதிகம் படித்துவிட்டால் மட்டும் போதாது. பண்பாடு வேண்டும். அதுதான் முக்கியம். அதைப் புரிந்து கொள்வதற்காகத்தான் இந்தக் கதை.

இப்பொழுதும் நம்மில் பலபேர் அடிக்கடி மிருகங்களைச் சம்பந்தப்படுத்திப் பார்க்காமல் இருக்க முடிவதில்லை.

இரண்டு நண்பர்கள் பேசிக் கொண்டார்கள்.

“உன்னிடம் நான் சிநேகிதம் வைத்துக் கொண்டதற்குப் பதிலாக ஒரு எருமை மாட்டிடம் சிநேகிதம் வைத்திருக்கலாம்” என்றார் ஒருத்தர்.

“வைத்திருக்கலாம்! ஆனால் அதற்கு எருமை மாடு சம்மதிக்க வேண்டுமே! என்றார் மற்றவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடக்கு - கிழக்கைச் சேர்ந்த வறிய மாணவர்களின்

# கல்விக்கு உதவ அருளானந்த அறக்கட்டளை புலமைப்பரிசில் விண்ணப்பங்களை கோரியுள்ளது

கல்வியைத் தொடர்வதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ள வடக்கு –கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு ஆதரவளிப்பதற்கு ஸ்ரீ அருளானந்தா அறக்கட்டளை முன்வந்துள்ளது.

இந்த வகையில் உதவி தேவைப்படும் மாணவ மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகளின் கல்வித் திறமைகளை பாடசாலை மற்றும் அரசாங்க பொதுப் பரீட்சைகளின் உத்தியோகபூர்வ பெறுபேறுகளை ஆய்வு செய்வதன் மூலமாகவும் அவர்களது பொருளாதார சூழ்நிலையை, அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ ஆவணங்கள் மூலமாக ஆராய்ந்து பார்த்து விண்ணப்பங்களின் தகைமையை உறுதி செய்யவுள்ளது.

மேலும் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளில் இருபது வயதிற்குட்பட்டோருக்கு பிரத்தியேக வகுப்புக்களை மேற்கொள்ளல், புத்தகங்களைக் கொள்வனவு செய்தல் போன்ற கல்விச் செலவுகளை உள்ளடக்கும் வகையில் புலமைப் பரிசிலை வழங்குவதற்கும் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் மாணவ மாணவியருக்கு அவர்கள் தம் தங்குமிட செலவுகள் மற்றும் இலங்கையில் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கான செலவுகளை உள்ளடக்கும் வகையிலான புலமைப் பரிசிலை வழங்கவும் அருளானந்தா அறக்கட்டளை முன்வந்துள்ளது.

புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிப்பவர்கள் தமது கல்வித் திறமைகளை விபரித்து சுருக்க குறிப்பு மற்றும் தமது பொருளாதார நிலையை விளக்கும் அறிக்கையினை The Secretary, Arullanantha Trust (UK), 14, Belmont Road, Uxbridge, UB8 IRE, Middlesex, United Kingdom.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பங்களை தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும் எனவும் இவற்றை ஆராய்ந்து தகைமை வாய்ந்தவர்களை தெரிவு செய்வதுடன் பிற்படுத்தப்பட்ட மற்றும் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களும் பெண்களும் இந்தப் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்குமாறு மேற்படி அருளானந்த அறக்கட்டளையினர் கேட்டுக் கொள்கின்றனர். (2-6)

# மணிவிழா



(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் வி. மாணிக்கத்தின் 60 ஆவது அகவையை முன்னிட்ட மணிவிழா நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் கலைமாணி, முது தத்துவமாணி பட்டங்களைப் பெற்றுள்ளதுடன் யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார்.

மேலும் 1994 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

# இராசி பலன்

*20-04-2010*
*(சித்திரை 7, செவ்வாய்க்கிழமை)*
*சஷ்டி பிற்பகல் 1.35 மணிவரை*
*திருவாதிரை பிற்பகல் 4.39 மணிவரை*
*இராகுகாலம் 3.02-4.32 மணிவரை*
*சுபநேரம் 10.32-12.02 மணிவரை*
*சஷ்டி விரதம்*

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பணவருவாய், இனிய சம்பவம், வாக்கு மேன்மை. |
| இடபம் | கௌரவக்குறைவு, பொருள் விரயம், சயன சுகக்குறைவு, வேலைச்சுமை. |
| மிதுனம் | நண்பர்கள் உதவி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், போசன நன்மை. |
| கடகம் | உணர்ச்சி வசப்படல், சுபசெலவு, முயற்சி தாமதம், திடீர் பயணம். |
| சிங்கம் | எடுத்த கருமங்கள் கைகூடும், கலந்துரையாடல், கீர்த்தி, தெய்வ சிந்தை. |
| கன்னி | சுபநிகழ்வு, இனிய தகவல், செய் தொழில் விருத்தி, நண்பர்கள் உதவி. |
| துலாம் | அதிக பிரயாசை, ஆரோக்கியக் குறைவு, பிரயாண நன்மை, அதிக செலவு. |
| விருச்சிகம் | எதிர்பாராத பகை, போசன சுகம், ஆரோக்கியக்குறைவு, தொழில் நன்மை. |
| தனுசு | அபூர்வ சந்திப்பு, நல்ல தகவல், போசன சுகம், தேகநலன். |
| மகரம் | திடீர் பயணம், சத்துருஜெயம், தொழில் ஆர்வம், பணவருவாய். |
| கும்பம் | பெரியோர் சந்திப்பு, காரிய இடையூறு, பூர்வ புண்ணிய கருமம், அதிக செலவு. |
| மீனம் | பயந்த சுபாவம், ரோகநிலை, முயற்சி தாமதம், உறவினர் சந்திப்பு |

வளவன்

# தமிழ் மொழித்தின வலயமட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தீவகக்கல்வி வலய தமிழ் மொழித்தின கலைத்திறன் வலய மட்டப் போட்டி நிகழ்வுகள் நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் காலை 8.30 மணிக்கு வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி நிகழ்வில் வாசிப்பு ஆக்கத்திறன் வெளிப்பாடு, பேச்சு, பாவோதல், இசைவும் அசைவும், தனி நடனம், இசை தனி ஆகியன நாளையும் ஏனைய நிகழ்வுகள் நாளை மறு தினமும் நடைபெறவுள்ளன என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும் மாவட்ட மட்ட எழுத்தாக்க போட்டிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். (2-4)

# மகாகும்பாபிஷேகம்

(சாவக்சேரி)

கச்சாய் தெற்கு மருதடி விநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்ட மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு சிவஸ்ரீ தி. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள், சிவஸ்ரீ பரராஜசேகரக் குருக்கள் ஆகியோரது தலைமையில் நடைபெறவுள்ளது. (4-29)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 70 |
| தக்காளி | 60 | 70 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 35 | 40 |
| கோவா | 35 | 45 | 50 |
| கரட் | 80 | 90 | 100 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 60-70 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 50 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கரணைக் கிழங்கு | -- | -- | 40 |
| பயிற்றங்காய் | 80 | 90 | 60 |
| லீக்ஸ் | 120 | 130 | 90 |
| பீற்றூட் | 30 | 40 | 40 |
| கறிமிளகாய் | 80 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 200 |
| போஞ்சி | 150 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | -- |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 130 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 40 | 35 |

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 17ஆவது வருடாந்த செயலமர்வுகள்

## நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பதினேழாவது வருடாந்தச் செயலமர்வுகள் நாளை புதன்கிழமை முதல் தொடர்ந்து 3 நாட்கள் யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

விஞ்ஞானச் சங்கத்தின் தலைவரும் மருத்துவ பீடாதிபதியுமான பேராசிரியர் க.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

**முதலாம் நாள் நிகழ்வுகள்**

முதலாம் நாள் நிகழ்வு புதன்கிழமை காலை 8.45 மணிக்கு ஆரம்பமாகும். இந்நிகழ்வில் பேராசிரியர் க.பாலசுப்பிரமணியம் தங்கப்பதக்கப் பேருரை " உடலுக்கு வெளியே கருக்கட்டல் - இலங்கையில் முன்னேறியுள்ள கருவளக் கவனிப்பு (In-Vitro Fertilization: Advanced fertility care in Sri Lanka)" என்னும் தலைப்பில் நிகழவுள்ளது.இப் பேருரையினை மகப்பேற்றியல் சக பெண் நோயியில்துறைப் பேராசிரியரும் கொழும்பு மருத்துவ பீடாதிபதியுமான பேராசிரியர் ஹர்சலால் செனவிரத்ன நிகழ்த்தவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து 10.30 மணியளவில் இந்த வருடக் கருப்பொருளான "பாரம்பரிய உணவுகள் (Traditional Foods)" பற்றிய கருத்தரங்கு நடைபெறும். உயிர் இரசாயனவியல் பேராசிரியை வசந்தி அரசரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.எஸ்.சிவலிங்கராஜா " யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய உணவுகள்" எனும் தலைப்பிலும், யாழ்.மருத்துவ பீட சமுதாய மருத்துவத் துறையைச் சேர்ந்த கலாநிதி எஸ்.சிவகணேஸ் " பாரம்பரிய உணவுகளும் சுகமும் (Health & Traditional Foods) " எனுந் தலைப்பிலும், திருநெல்வேலி விவசாயத் திணைக்கள விவசாய விரிவாக்க உதவிப் பணிப்பாளர் S.சிவகுமார் " யாழ்.குடா வில் பாரம்பரிய உணவுப் பயிர்கள் (Traditonal Food Crops in Jaffna Peninsula) "எனுந் தலைப்பிலும், யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறை தலைவர் பேராசிரியர் V.P. சிவநாதன் "பாரம்பரிய உணவுகளின் தேவையும் வழங்கலும் Demand & Supply of Traditional Foods " எனும் தலைப்பிலும் உரையாற்றவுள்ளனர்.

பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கணித -புள்ளி விபரவியற்றுறைக் கலாநிதி சி. ஸ்ரீசற்குணராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் விஞ்ஞானப் பிரிவின் தூய விஞ்ஞானப் பிரிவின் தலைவியும் யாழ். பல்கலைக்கழக மீன்பிடியில் துறைத் தலைவியுமான கலாநிதி திருமதி சிவசாந்தினி குகநாதன் " மீன்களில் அத்தியாவசிய கொழுப்பு அமிலங்கள் (Essential Fatty Acids of Fish) எனுந் தலைப்பில் உரையாற்றுவார். அதனைத் தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலை புற்று நோயியல் சிகிச்சை நிபுணர் கலாநிதி ந. ஜெயக்குமாரன் " மருத்துவத்தில் கதிர்வீச்சின் பாதுகாப்பான பயன்பாடு (Safe Use of Radiation in medicine) " எனுந் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

பிற்பகல் 3.15 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதீகவியற்துறைக் கலாநிதி N. சிவயோகன் தலைமையில் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரயோக விஞ்ஞானப் பிரிவின் தலைவியும் யாழ்.பல்கலைக்கழக விவசாய இரசாயனவியற்றுறைத் தலைவியுமான கலாநிதி திருமதி நளினா ஞானவேல்ராஜா " தாவர பரிகரிப்பு - குறைந்த தொழில்நுட்ப உயிர்ப் பரிகரிப்பு முறை (Phytore mediation: A low -Technology Bioreme diation)" எனுந் தலைப்பில் உரையாற்றுவார்.

அதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக விவசாய இயந்திரவியற்றுறையைச் சேர்ந்த திருமதி துஷ்யந்தி மிகுந்தன் " நிலத்தடி நீரை முகாமைத்துவப்படுத்துவதில் கருவியாகும் நீர் பாதிப்புறும் தன்மையின் கணிப்பீடு (*Vulnerability assessment -an effective tool for ground water management*) " எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். (6)

## அம்புலன்ஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றம் யாழ். குடாநாட்டிலிருந்து கொழும்பு வைத்திய சாலைக்குச் செல்லும் நோயாளர்களுக்கும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் நோயாளர்களுக்கும் குறைந்த செலவில் சேவை அடிப்படையில் அம்புலன்ஸ் வாகன சேவையை ஆரம்பித்துள்ளது.

மேலும் இச் சேவையைப் பெறவிரும்புவோர் இல 211/17, நல்லூர் கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகத்திலோ அல்லது 021 222 1075 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ தொடர்புகொள்ளலாம் என கேட்கப்பட்டுள்ளது. (4)

## கொட்டப்படும் கழிவுகளால் சிரமத்துக்குள்ளாகும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

கல்வியன்காடு ஆடியபாத வீதியிலுள்ள முத்தமிழ் முன்பள்ளிக்கருகாமையில் குப்பைகள், குவிக்கப்பட்டுள்ளதால் சுகாதார மற்ற சூழல் நிலவுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சிறுவர்கள் கல்வி கற்கின்ற இந்த முன்பள்ளிக்கருகில் வீட்டுக் கழிவுகள் முதற்கொண்டு, வெட்டப்பட் இறைச்சிக் கழிவுகளும், சிகையலங்கார நிலையங்களின் தலைமுடிக் கழிவுகளும் கொட்டப்பட்டுள்ளன.

இது சிறுவர்களின் உடல்நலத்தை பாதிக்குமெனவும், சம்பந்தப்பட்டோர் நடவடிக்கையெடுக்குமாறு அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (2)

## பாடசாலையில் பணம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென் பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையிலிருந்து 2இலட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை அதிபரின் அறையின் பின்புறமாக உள்நுழைந்த திருடர்கள் இக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து கல்வித் திணைக்களத்துக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 1, 2 மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரவட்ட செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (4-29)




# கிராம அபிவிருத்தியின் நோக்கு மகளிர் அபிவிருத்தியை மேம்படுத்தி திறன்களை வளர்த்தெடுத்தலே

## மேலதிக அரசு அதிபர் உரை

மகளிர்களுக்கு பயிற்சி நெறிகளை வழங்கி வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களின் ஆற்றல்கள் வெளிப்படும் போது பிரதேச மட்டம் மூலமாக மாவட்ட அபிவிருத்தியினை எய்த முடியும். இவ்வாறு மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரத்லிங்கம் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட மகளிர் அபிவிருத்தி நிலைய தையல் ,மனையியல் கண்காட்சியில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கும் போது,

கிராம அபிவிருத்தியின் நோக்கு மகளிர் அபிவிருத்தியினை மேம்படுத்தி திறன்களை வளர்த்தெடுத்தலே. இதற்கு கிராம அபிவிருத்தி திணைக்களம் மகளிர்களுக்கு பயிற்சியினை வழங்கி வாழ்வாதாரத்தை மேம்படுத்த உறுதுணையாக நிற்க வேண்டும்.பொழுது போக்காக கற்பவர்கள் அவ்விடத்திலேயே தமது கற்றலை நிறுத்துகின்றார்கள்.

இங்கு மகளிர்களின் ஆற்றலை மேம்படுத்த தையல், கைவினை மனையியல் விவசாயம் என பல்வேறுபட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில்தையல்கைவினை என்பன மிக சிறந்த இடத்தை பெற்று கண்காட்சியில் முன்னிலை வகிக்கின்றன.

இந்தியாவிலே கிராம மட்டத்தில் சிறு குழுக்களுக்கு கடன் உதவிகள் கிடைக்கின்றது. ஆனால் வடமாகாணத்தில் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் சமாசங்கள் உருவாக்கப்பட்ட நிலையில் உதவிகளை வழங்கி பயிற்சிக்களை வழங்க வேண்டிய தேவையுள்ளது.



ஏ 9 பாதை மூடப்பட்ட பின் கைவினை பயிற்சி பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட உள்ளூர் உற்பத்தியை கொண்டு பயிற்சி வழங்கினோம். தற்போது பாதை திற ந்த நிலையில் தரமான பொருட்களை நாடி சந்தைப்படுத்தல் நிலைப்படுகின்றது.

இதன் மூலம் கிராம அபிவிருத்தி திணைக்களம் பயிற்சி வழங்கும் போது நிலை நிறுத்தப்படுகின்றது.

எனவே மாதர் கிராம அபிவிருத்தி திணைக்களம் சிறப்பாக செயற்படும் போது பிரதேச மற்றும் மாவட்ட அபிவிருத்தியை அடைய முடியும் என்றார். (2-30)

## நிரந்தரக் கடைகளை மறைத்து போடப்பட்டிருந்த தற்காலிக கடைகள்

(நல்லூர்)

நல்லூர் சூழலில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிகக் கடைகள் நீக்கப்பட்டதனால் அப்பகுதியில் நிரந்தரமாக வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் வர்த்தகர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இந்து விடுதி கடைத் தொகுதியில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் இதுகுறித்து தெரிவிக்கும் போது தமது கடைகளை மறைத்தே பல தற்காலிகக் கடைகள் போடப்பட்டிருந்தன. அச்சமயத்தில் தமது வியாபார நடவடிக்கைகள் மந்த கதியிலேயே இடம்பெற்றதாகவும், தற்போது மீண்டும் கடைகள் மக்களின் பார்வையில் படும் படியாக வந்துள்ளது என்றனர்.

மேலும் குறைந்த விலைகளில் உடு புடவைகள் விற்கப்படும்போது அதன் தரத்தினைப் பார்க்காது மக்கள் தொகையாக கொள்வனவு செய்யும்போது அது தமது வியாபாரத்தை பாதித்ததாகவும் தற்போது இந்நிலை நீங்கியுள்ளதாகவும் அப்பகுதி ஆடை வர்த்தர்களும் தெரிவித்துள்ளனர்.(2)

## க.பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகள்

**சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்**

க.கபிலன் -4ஏ,3பி, சி,எஸ், ஜெ.ஜெயக்குமார் -3ஏ, 3பி,2சி, எஸ், க.காஞ்சனாகரி-3ஏ,பி,2சி,3எஸ், கு.அபிராமி-2ஏ,3பி,4சி, பொ.கோகிலன்-2ஏ,2பி,4சி.

**யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி**

***தமிழ்மொழி மூலம்***

எஸ்.நிஷாந்தன் -9ஏ, எஸ்.ஹெரிதி -8ஏ,பி, என்.அனுசுதன்-8ஏ,சி, பி.டிஷாந்-8ஏ,சி, ரி.மனோஜன் -8ஏ,சி, ஜி.சுஜீவன் -7ஏ,பி,சி, எஸ்.விதுர்சன் -7ஏ,பி,சி, ஜே.விதுாஷன் நிக்கொலஸ் -7ஏ,பி,சி, வை.ஜனுாஷ் -7ஏ,சி,எஸ், எஸ்.பிரவீன் -6ஏ,2பி,எஸ், எஸ்.கௌமாறன் -6ஏ,பி,சி,எஸ், ரி.பிறையனெரிக்- 5ஏ,3பி,சி, எஸ்.யசோதாகிருஷ்ணா -5ஏ,3பி,சி, பி.மதுசுதன் - 5ஏ,பி,3சி, எஸ். சஞ்ஜீபன்-5ஏ,3பி,சி, பி.ஹரிசக்தி-5ஏ

***ஆங்கில மொழி மூலம்***

ஜே.வசந்தன் -9ஏ, என்.ராஜாரரம் -9ஏ, கே.டசிந்ராகிருஷ்ணா-8ஏ,பி, ரி.பேர்டினன் சைலோ -8ஏ,பி, ஆர்.கௌசன் -8ஏ,பி, எஸ்.லெஸ்லி லவன்-8ஏ,பி, எஸ். கஜந்தன்-8ஏ,சி.

எச்.ஜெறோபர்-8ஏ,சி, எம்.சிவறோசன்-7ஏ,பி,சி,ஜி. விபூஷன்-7ஏ,பி,சி, ரி.ரகுசாந்தன்-6ஏ,2பி,சி, ரி. பிரசன்னா-5ஏ,3பி,சி, எஸ்.அனோப் முத்துக்குமார் -5ஏ,பி,3சி, பி.சஜீபன்-5ஏ,2பி,சி,எஸ்,எம்.வித்தகன்-5ஏ,பி, 2சி,எஸ்

# இன்றைய தேவைகளையும்-நீண்டகால நலன்களையும் முன்னிறுத்தி செயற்பட அனைவரும் முன்வாருங்கள்

## தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி அழைப்பு

கடந்த 2010 ஏப்ரல் 08 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் விட்டுக்கொடுக்க முடியாத அடிப்படை அரசியல் கொள்கைகள் தொடர்பாக பரவலான விழிப்பினை ஏற்படுத்தும் நோக்குடனும், வளர்ச்சி பெற்று வந்த தமிழ்த் தேசிய அரசியல் நிலைப்பாட்டினைப் பலவீனப்படுத்திட முற்பட்ட சில அரசியல் சக்திகள் தொடர்பில் எமது எதிர்ப்பினை வெளிப்படுத்தும் நோக்குடனும் திருமலை மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் போட்டியிட்ட எமக்கு வாக்களித்த மக்களுக்கும், எமது பொதுக்கூட்டங்கள் - கலந்துரையாடல்கள் - சந்திப்புக்களில் பங்கேற்ற மாணவர்கள், கல்வியாளர்கள், சிந்தனையாளர்கள், ஊடகத்துறையினர் மற்றும் அனைத்துத்தரப்பு மக்களிற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் எமது கொள்கைகளை முழுமையாக ஆதரித்து குரல் கொடுத்த புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள், புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள், புலம்பெயர் ஊடகத்துறையினர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெரும் மனித அவலங்களின் தாக்கத்திலிருந்து மக்கள் மீண்டிடாத காலகட்டத்தில் எம்மீது இந்த தேர்தல் திணிக்கப்பட்டுவிட்டது. அனைத்துவித சனநாயக நடவடிக்கைகளும் தோல்வியடைந்து, ஆயுதம் தரித்த உரிமைப் போராக அது மாற்றங் கண்ட வரலாற்றினைக் கொண்டிருந்த எமது தேசம் மீளவும் சிறீலங்காவின் சனநாயக அமைவுக்குள் நம்பிக்கை வைப்பதற்கான எதுவித நியாயமான காரணங்களும் இல்லாத காலகட்டத்தில் இந்தத் தேர்தல் இடம்பெற்று முடிந்துள்ளது.

இது பெருமளவு மக்கள் தேர்தல் நடவடிக்கைகளினையும், தேர்தலினையும் புறக் கணித்ததன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நாங்கள் இந்தத் தேர்தல்களை பாராளுமன்றத்திற்கான ஆசனங்களைக் கைப்பற்றுதல் எனும் குறுகிய நோக்குடன் அணுகவில்லை என்பதை [illegible] ஆரம்பம் முதலே தெளிவாக சொல்லி வந்தோம்.

தமிழ் மக்களின் நீண்டகால நலன்களும், பாதுகாப்பும் இன்று ஏற்பட்டுள்ள குறுங்கால அச்ச நிலையினால் தோற்கடிக்கப்படாது இருப்பதற்கான விழிப்பினை ஏற்படுத்துவதே எமது முதன்மை நோக்கமாக இருந்தது.

எமது தேர்தல் விஞ்ஞாபனம் இந்த அடிப்படையிலேயே எழுதப்பட்டது. தமிழர் தேசம் எனும் நிலைப்பாட்டினை தெளிவாகவும், துணிச்சலுடனும் நாங்கள் வரைவு செய்தோம். இந்த தமிழ்த்தேசம் சிங்கள தேசத்துடன் இணைந்து கூட்டாக செயற்படுவதற்கான நவீனத்துவமான வழிமுறைகள் பற்றி நாங்கள் விவாதித்தோம்.

எங்களால் இயன்றவரை திருமலை மற்றும் யாழ். மாவட்டங்களில் நாங்கள் பொதுக் கூட்டங்கள் வாயிலாகவும் சந்திப்புக்கள் வாயிலாகவும் இவற்றினை தெளிவுபடுத்தி வந்துள்ளோம்.

நாம் இத்தேர்தல்களில் பலத்த சவால்களைச் சந்தித்தோம். எமது கருத்துக்கள் மக்களைச் சென்றடைவதற்கான ஊடக சூழல் யாழ். மற்றும் திருமலை மாவட்டங்களில் நிலவவில்லை. அதனை மீறி மக்களை நேரிடையாக சென்றடைவதற்கான கால அவகாசமோ, வளங்களோ எமக்குக் கிடைக்கவில்லை.

அத்துடன் சில பகுதிகளுக்குச் சென்று நாங்கள் கருத்துக்களை கூறுவதற்கான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன. எனினும், நாங்கள் தேசம் என்பது தொடர்பான சிந்தனைகளையும் இலங்கை தீவின் அரசு, சிங்கள - தமிழ்த் தேசங்களின் கூட்டாக இருக்கும் வகைகள் பற்றிய எண்ண ஓட்டங்களையும் இயன்றளவு மாணவர்கள், கல்வியாளர்கள், சிந்தனையாளர்கள் மற்றும் தேசியப் பற்றுக் கொண்ட செயற்பாட்டாளர்கள் முன்பாக வைத்துள்ளோம்.

மேலும் புதிய இளம்வீச்சுக்கொண்ட ஆர்வலர்களையும் நாங்கள் இந்தத் தேர்தல் மேடைகளைப் பயன்படுத்தி மக்கள் முன்பாக அறிமுகம் செய்துள்ளோம்.

எங்கள் நடவடிக்கைகள் அடுத்துவரும் காலகட்டங்களில் மக்களின் குறுங்கால மனிதாபிமான நலன்களை பிரதிபலிக்கும் அதேவேளையில் தமிழ் மக்களின் நீண்டகால நலன்களைப் பாதுகாப்பதற்கான அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையிலும் அமையும்.

தமிழர் தாயகத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் விரிவுபட்ட மக்கள் கட்டமைப்புக்களை நிறுவுவதையும் மக்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதையும் எம் முன்னுள்ள அவசர உடனடிப் பணிகளாக கருதுகின்றோம்.

இதற்கான ஆதரவினை அனைத்துத் தரப்பிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள், கற்கையாளர்கள், ஊடகவியலாளர்கள் துணிச்சலுடன் எம்முடன் இணைந்து செயற்பட முன்வருமாறு அழைக்கின்றோம்.

அத்துடன் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்டமைப்புக்களும் புலம்பெயர் ஊடகங்களும் தொடர்ந்தும் எம்முடன் கரம் கோர்த்து செயற்பட வேண்டுமென அழைப்பு விடுக்கின்றோம்.


அதேவேளை நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிரானவர்கள் அல்ல. ஒரு இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமான மக்களும் 40 ஆயிரத்திற்கும் அதிகமான இளைஞர்களும் உயிர்த் தியாகம் செய்து வலிமை பெற்றுள்ள தமிழ்த் தேசியக் கொள்கை நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேர்மையாக முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென நாம் விரும்புகின்றோம்.

அவ்வாறான ஓர் சூழ்நிலை ஏற்படும் பொழுது அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு நாம் தயாராகவுள்ளோம். அத்துடன் "தனித்துவமான இறைமை கொண்ட தமிழ்த் தேசம்" என்ற நிலைப்பாட்டை உறுதியாக முன்னெடுத்துச் செல்லும் சகல தரப்புகளுடனும் எதிர்காலத்தில் இணைந்து செயற்பட நாம் தயாராகவேயுள்ளோம்.

தமிழ்த்தேசியத்திற்கான மக்கள் முன்னணி

# பொது இணக்கப்பாட்டை விரைவில் எட்ட எதிர்க்கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டும்

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் ஆதரவு வழங்கும் பட்சத்தில் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் செயற்பாடுகளை விரைவில் முடிவுக்கு கொண்டு வர முடியும் என்பதுடன் பொது இணக்கப்பாட்டை எட்டலாம் என்று குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் எதிர்கால செயற்பாடுகளில் ஐக்கிய தேசிய கட்சியையும் மக்கள் விடுதலை முன்னணியையும் இணைத்துக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

எனவே மேற்குறித்த இரண்டு கட்சிகளினதும் ஒத்துழைப்புடன் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வ்வ தயாரிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்பது எமது நம்பிக்கையாகவுள்ளது.

அவை ஏற்கனவே ஆரம்பித்தில் சர்வகட்சி குழுவில் அங்கம் வகித்தன. ஆனால் இரண்டு கட்சிகளும் இடைநடுவில் விலகிக் கொண்டன. அந்த வகையில் அந்த கட்சிகள் எமக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்று கருதுகிறோம்.

மேலும் எதிர்க்கட்சிகள் தேசியப் பிரச்சினை தீர்வு தொடர்பில் தமது கட்சிகளின் நிலைப்பாட்டை எழுத்து மூலமாகவோ வாய்மொழி மூலமாகவே எமக்கு அறிவிக்கலாம்.

அமைச்சரவை நியமிக்கப்பட்டதன் பின்னர் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் செயற்பாடுகளை ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றோம் என்றார். (2-6)

# தென்னிலங்கை வாதுவையில் 2கி.மீ. தூரத்துக்கு கடலரிப்பு

## கடற்றொழிலாளர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் வாதுவை, பொதுப்பிட்டிப் பகுதியில் கடலரிப்புக் காரணமாகத் தமது மீன்பிடி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பிரதேசக் கடற்றொழிலாளர் தெரிவிக்கின்றனர்.

அங்கு சுமார் 2 கிலோமீற்றர் தூரம் கடலரிப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வனர்த்தம் காரணமாக 300 க்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் தமது தொழிலில் ஈடுபடுவதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

ஆனால் தமக்கு இது தொடர்பான எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லையெனக் களுத்துறை மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்.

ஏதேனும் அனர்த்த நிலை உருவாகும் பட்சத்தில் அது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் மேலும் குறிப்பிட்டார். (2-6)

# வடக்கில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு பிரித்தானியா நிதி உதவி வழங்கியது

(கொழும்பு)

வடக்கில் இடம்பெயர்ந்த நிலையில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் புனர்நிர்மாணப் பணிகளுக்கென பிரித்தானிய அரசாங்கம் இரண்டு கோடி ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது.

இதற்கு முன்னரும் பிரித்தானிய அரசினால் இலங்கைக்கு இருபத்தைந்து கோடி ரூபா நிதியுதவி அளிக்கப்பட்டிருப்பதாக இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் பீற்றர் ஹவுன்ஸ் தெரிவித்துள்ளார்.

நிதியுதவி தவிர மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான வாழக்கைத் தரத்தை உயர்த்துவதற்கென உபகரணங்களையும் பிரித்தானியா வழங்கவுள்ளதென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# ஹெரோயின் வைத்திருந்த இருவர் கைதாகினர்

(கொழும்பு)

13 கிராம் நிறையுள்ள ஹெரோயின் வைத்திருந்த இரு சந்தேக நபர்களை போதைப் பொருள் தடுப்புப்பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த ஜயகொடி தெரிவித்தார்.

ராஜகிரியவிலுள்ள அபேசுந்தரபுர பிரதேசத்தில் வைத்தே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஒரு சந்தேக நபரிடமிருந்து 10 கிராம் ஹெரோயினையும் மற்றைய சந்தேக நபரிடமிருந்து 3 கிராம் ஹெரோயினையும் கைப்பற்றியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த ஹெரோயினை இவர்கள் எங்கிருந்து பெற்றுக் கொண்டனர் என்பன தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (2-6)

## கடந்தாண்டு மிஹின் எயார் நிறுவனத்துக்கு 930 மில்லியன் ரூபா நட்டம்

அரசாங்கத்திற்கு சொந்தமான மிஹின் எயார் நிறுவனம் கடந்த ஆண்டில் 930 மில்லியன் ரூபா நட்டத்தை பதிவு செய்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியே நட்டமடைவதற்கான பிரதான காரணி எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந் நிறுவனம் ஏற்கனவே 3.5 பில்லியன் ரூபா நட்டத்தை எதிர்நோக்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் இந் நிறுவனம் 2006 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதாகவும் அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஆளும் கட்சியின் சார்பில் காலி மாவட்டத்தில் தெரிவான சஜின் வாஸ் குணவர்தன அப்போது நிறைவேற்றுப் பணிப் பாளராக கடமையாற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

## ரணில் விக்கிரமசிங்கவே எதிர்க்கட்சித் தலைவராக செயற்படுவார்-ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

ஏழாவது பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைமைத்துவம் குறித்து ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது.ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவராகவும் அதேவேளை எதிர்க் கட்சித் தலைவராகவும் ரணில் விக்கிர மசிங்க செயற்படுவார் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சிகளை பலவீனமடையச் செய்கின்ற அரசாங்கத்தின் செயற்றிட்டங்களுக்கு எதிர்த்தரப்பினரே தூபமிடுவதாக அமைந்து விடக் கூடாது என்றும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்றதுக்குத் தெரிவாகியுள்ளவருமான ஜயவீரசிங்க மேலும் தெரிவிக்கும் போது,

ஏழாவது பாராளுமன்றம் நாளை மறுதினம் கூடவிருக்கின்ற நிலையில் எதிர்க் கட்சித் தலைவர் பதவி குறித்து ஜனநாயக தேசியக் கூட்டணி தெரிவித்திருந்த கருத்துக்கள் குழப்பத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்திருந்தன.

இலங்கையின் பாராளுமன்ற வரலாறுகளில் ஆட்சியாளருக்கு அடுத்த படியாக அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சியிலிருந்தே எதிர்க்கட்சித் தலைவர் நியமிக்கப்படுவது வழக்கமாகும். இது மரபாகவும் இருந்து வருகின்றது.

இந்நிலையில் தற்போது அமையவிருக்கின்ற புதிய பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதானமாகக் கொண்ட ஐக்கிய தேசிய முன்னணி, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அடுத்தபடியாக அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

அத்துடன் மேலும் இரண்டு மாவட்டங்களின் இறுதி முடிவுகளும் நிலுவையில் இருக்கின்றன.எனவே ஏழாவது பாராளுமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவராக எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே செயற்படுவார்.

பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் அரசாங்கத்திற்கு எமது கட்சியே சவாலாக விளங்குகின்றது. ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஜனநாயக தேசியக் கூட்டணி மிகவும் குறைவான ஆசனங்களையே பெற்றுக் கொண்டுள்ளது.

எனவே அந்த முன்னணியில் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் நியமிக்கப்படுவதென்பது நடைமுறைக்கு சாத்தியமற்றதாகும். எதிர்க்கட்சிகள் பலவீனமடைய வேண்டும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

இதற்கு எதிர்த் தரப்பினரே உதவும் வகையில் எமது நடவடிக்கைகள் அமைந்து விடக் கூடாது என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். மேலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் ஏனைய கட்சிகள் அலட்டிக் கொள்ளத்தேவையில்லை என்றார். (2-6)

## அமைச்சர்களின் நடவடிக்கைகள் பாராளுமன்ற உறுப்பினர்களினால் கண்காணிக்கப்படும்-ஜனாதிபதி



(கொழும்பு)

அமைச்சர்களின் நடவடிக்கைகள் பாராளுமன்ற உறுப்பினர்களினால் கண்காணிக்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்கமைய புதிய அமைச்சரவையில் அங்கம் வகிக்க உள்ள அமைச்சர்கள் தமது கடமைகளை உரிய முறையில் மேற்கொள்கிறார்களா என்பதனை ஆராய்வதற்காக கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

மேலும் அமைச்சரவையின் எண்ணிக்கை 38 ஆக வரையறுக்கப்பட உள்ளதாகவும் அதற்கு நிகரான எண்ணிக்கையில் பிரதி அமைச்சர் பதவிகளும் வழங்கப்படவுள்ளதாகவும் இம்முறை அமைச்சரவை சாரா அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படமாட்டாதெனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிரச்சினைகள் இருப்பின் அது குறித்து தம்மிடம் நேரடியாக அறிவிக்குமாறும் அவ்வாறு அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு வியாழக்கிழமையை ஒதுக்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

## ஐ.தே.கவின் பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் மத்தும பண்டாரவிற்கு அழைப்பில்லை

(கொழும்பு)

ஏழாவது பாராளுமன்றத்திற்கு தெரிவான ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுக்கூட்டம் நாளை புதன்கிழமை கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

இதேவேளை பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய சகல உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், கட்சியின் சார்பில் மொனராகலை மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்று தெரிவான மத்தும பண்டாரவிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்ற தேர்தலுக்கான மொனராகலை மாவட்டத்திற்கான வேட்பு மனுவில் பெயரொன்றை நீக்கியமை தொடர்பில் அவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு அவருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தெரிகிறது. (6)

## ஐ.ம.சு.கூ. முன்வைத்த மஹிந்த சிந்தனைக்கு பெரும்பாலான மக்கள் ஆதரவளித்துள்ளனர்

### ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவிப்பு

(கொழும்பு)

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்வைத்த மஹிந்த சிந்தனைக்கு மக்கள் ஆதரவளித்துள்ளார்கள்.

பெரும்பாலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மக்கள் வாக்களித்துள்ளார்கள் என்றும் ஆளும் ஐ.ம.சு.கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில், நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட புதிய உறுப்பினர்களுடன் ஜனாதிபதி சந்தித்து கலந்துரையாடினார்.

இதுகுறித்து கருத்து வெளியிடும் போதே ஏ.எம்.ஹிஸ்புல்லா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தலில் மக்கள் எந்த நோக்கத்துக்காக எமக்கு வாக்களித்தார்களோ அந்த நோக்கத்தை அவர்களின் தேவைகளை கண்டறிந்து நீங்கள் செயற்படவேண்டும் என்று ஜனாதிபதி அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கூறினார்.

கடந்த கூட்டமைப்பு அரசாங்கத்தில் அதிகளவான அமைச்சர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

ஆனால், இம்முறை அமைச்சர்கள் குறைக்கப்பட வேண்டும் என்று கோடிட்டு காட்டினார். எல்லோருக்கும் அமைச்சர் பதவி கிடைக்கவில்லை என்று ஆதங்கப்படக் கூடாது.

இதற்கு நீங்கள் எனக்கு ஒத்துழைப்பு தந்து நாட்டை அபிவிருத்தி பாதையில் மென்மேலும் இட்டுச் செல்ல ஆதரவு தர வேண்டும்.

அதாவது முன்னர் அமைச்சர்களாக, பிரதி அமைச்சர்களாக இருந்தவர்கள் இம்முறை வெறும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவே செயற்பட வேண்டுமென்றும் கோடிட்டு காட்டினார் என்றார். (2-9)

## அடிப்படை வசதிகளின்றி அல்லல்படும் மூதூர், ஈச்சிலம்பற்றில் மீள்குடியேறிய மக்கள்

(கொழும்பு)

மூதூர் மற்றும் ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் மீளக்குடியேற்றப்பட்ட மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

2006 ஆம் ஆண்டு ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக சொந்த இடத்திலிருந்து இடம்பெயர்ந்து மீண்டும் 2007 ஆம் ஆண்டு மீளக்கூடியேற்றம் செய்யப்பட்ட பூநகர், பூமரத்தடிச்சேனை, ஈச்சிலம்பற்று, கறுக்காமுனை, இலங்கைத் துறை, முகத்துவாரம், வெருகல் முகத்துவாரம், மாவடிச்சேனை, ஆனைத்தீவு முதலான கிராமங்களைச் சேர்ந்த மக்களே அடிப்படை வசதிகளின்றி பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாகி வருகின்றனர்.

இடப்பெயர்வின் போது சேதமடைந்த வீடுகள் முழுமையாகத் திருத்தப்படாமலும் வீட்டுத் திட்டம் முழுமையாக வழங்கப்படாமலும் இருப்பதாகவும் அம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் மின்சார வசதி, போக்குவரத்து வசதி, காணிகளுக்கான எல்லை முதலான பொது வசதிகள் பலவும் தீர்க்கப்படாமல் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-6)

## உலகைப் பாதுகாக்க அனைத்து நாட்டின் மக்களும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்

### சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

உலகைப் பாதுகாப்பதற்கு அனைத்து நாட்டு மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உலக சுற்றாடலை பாதுகாப்பது ஒரு நாட்டின் எல்லைக்கு வரையறுக்கப்பட்ட விடயம் எனவும் உலக சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு உலக நாட்டு மக்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (6)

## நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது

### ஜயலத் ஜெயவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி முகாம்கள் மற்றும் மீள்குடியேற்றப்பட்ட கிராமங்கள் ஆகியவற்றை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு பின்னர் சென்று பார்வையிடவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் நிவாரணம் மற்றும் மனித உரிமைகள் விடயம் தொடர்பான உதவிச் செயலாளர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த நிலையில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்கு சென்று அம் மக்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து இம் மக்களின் நிலைமையை கட்சியின் தலைமைப் பீடத்துக்கு அறிவிப்பதற்கு எதிர்பார்க்கிறேன் என்றார். (2-6)

# களம் பல கண்ட யாழ் கோட்டை 9

## றைக்ளோப் வன் ஹூன்ஸ்

யாழ்ப்பாணக் கோட்டைக்குள் ஒல்லாந்தர் குடியேறினர். யுத்தத்தினால் சிதைந்த மாளிகைகள் தற்காலிகமாகத் திருத்தப்பட்டன. ஒல்லாந்தப் படையுடன் நார்டென் கப்பலில் வந்த பாதிரியார் பால் தேயஸ் போர்த்துக்கேயரின் கத்தோலிக்க் தேவாலயத்தைப் புரட்டஸ்தாந்துத் தேவாலயமாகச் சமயச் சுத்திகரிப்புச் செய்து முதலாவது நன்றிப் பிரார்த்தனையை நடாத்தினார்.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தையும் அதனைச் சார்ந்த பகுதிகளையும் தத்தம் ஆட்சிக் காலத்தில் நிர்வகித்தனர். அதனால் யாழ்ப்பாணக் கோட்டையை யாழ்ப்பாண மக்கள் இராசவாசல் என்றே அழைத்தனர். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணப் பிரதேசத்தை 32 கோயிற்பற்றுக்களாகப் பிரித்தனர். ஒவ்வொரு கிறிஸ்தவ தேவாலயமுள்ள பகுதியும் ஒவ்வொரு கோயிற் பற்றாகக் கருதப்பட்டது. நல்லூர், சுண்டுக்குழி, வண்ணார் பண்ணை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, உடுவில், மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி, அச்சுவேலி, புத்தூர், கோப்பாய், உடுப்பிட்டி, கட்டைவேலி, பருத்தித்துறை, நாவற்குழி, சாவகச்சேரி, கச்சாய், வரணி, முள்ளிப்பற்று முதலான 32 கோயிற் பற்றுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

இந்த ஒவ்வொரு கோயிற்பற் றுக்கும் ஒவ்வொரு தமிழ்ப்பிரதிநிதி நிர்வாகத்திற்குத் துணைசெய்பவராக நியமிக்கப்பட்டிருந்தார். அந்த அந்தக் கோயிற்பற்றில் உயர்குலத்தாலும் செல்வாக்காலும் நாட்டாண்மையாக விளங்கிய ஒருவர் இப்பதவியை வகித்தார்.

யாழ்ப்பாணக் கோட்டையினுள் இருந்த அடுக்களையில் பெரும் அவியல் நடக்கும். ஒல்லாந்தர் மாட்டிறைச்சி உண்பவர்களாதலால் கோட்டைக்குள் மாடுகளை அறுக்கும் ஓரிடத்தையும் கொண்டிருந்தனர். பசுவதை யாழ்ப்பாண மக்களால் ஒதுக்கப்பட்ட ஆசாரமாதலால் மாட்டிறைச்சியைச் சைவர்கள் அன்று உண்பதில்லை. அதனால் இறைச்சிக்கு மாடுகளை விற்கமாட்டார்கள். எனவே ஒல்லாந்தர் பாலிற்கென மாடுகளை வாங்கி யாழ்ப்பாணக் கோட்டையில் அடைத்து தேவையான போது அவற்றினை வெட்டியுண்டனர். இந்த உண்மை வெளியில் தெரிந்ததும் ஒல் லாந்தருக்கு யாழ்ப்பாண மக்கள் மாடுகளை விற்க முன்வரவில்லை. அதனால் ஒரு வரு டத்தில் ஒருவர் ஒரு மாடு வீதம் தங்களுக்கு இறை செலுத்த வேண்டுமென ஒல்லாந்தக் கொமு சாறி கட்டளையிட்டான்.

அவனது கட்டளைக்குப் பணிந்து யாழ்ப்பாண மக்கள் ஒவ்வொருவரும் வருடத்திற்கும் ஒரு மாடு வீதம் யாழ்ப்பாணக் கோட்டைக்கு அனுப்பிவைத்தனர். இதற்கு இணங்காத பலர் தண்டனைக்குப் பயந்து இந்தியாவிற்குச் சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் அரச உத்தியோகம் பார்த்த சண்மு நாத முதலியார் என்பவரிடம் ஒல்லாந்தக் கொமுசாறி ஒருநாள் விருந்தொன்றிற்கு நல்லதொரு காளைக்கன்று வேண்டுமெனக் கேட்டான். அதனால் சண்முகநாத முதலியார் தனது பதவியை உதறியெறிந்தார். திருநெல்வேலியில் வாழ்ந்த ஞானப்பிரகாசர் என்ற சைவர் ஒல்லாந்தருக்குப் பசுவொன்றினை வழங்கும் முறை வந்த போது அனைத்தையும் துறந்து இந்தியாவிற்கு ஓடிச்சென்று சிதம்பரத்தில் துறவு பூண்டார். சிதம்பரத்தில் ஞானப்பிரகாசர் குளம் என்ற திருக்குளத்தை அமைப்பித்தவரிவரே. வரணி தில்லைநாதர் என்பவரும் ஒல்லாந்தருக்கு மாடு கொடுக்க மறுத்துச் சிதம்பரத்துக்கு ஓடிச்சென்றார். இவ்வாறு பல சைவர்கள் ஒல்லாந்தரின் கட்டளைக்குப் பணியாது இந்தியாவிற்கு விலகிச் சென்றிருக்கின்றனர்.



யாழ்ப்பாண முற்றவெளியில் இருந்து நோக்கும் போது யாழ்ப்பாணக் கோட்டையின் தோற்றம். (ஹெய்ட் என்பவரின் வரைபு-1744)



ஒல்லாந்தரின் ***யாழ்ப்பாணக் கொமாண்டரி***க்குரிய சின்னம்

ஒல்லாந்தர் காலத்தில் நிலவிய நிர்வாகப் பிரிவுகளில் மிகப் பெரியதாக யாழ்ப்பாணக்கொமாண்டரி விளங்கியது. கொழும்பு, காலி ஆகிய ஏனையிரு கொமாண்டரிகளும் பரப்பில் சிறிய ஆள்புலங்களாகவிருந்தன. கொழும்புப் பிரிவு மகாஓயாவிலிருந்து பெந்தோட்டை நதிவரை எட்டுக் கோறளைகளைக் கொண்டு விளங்கியது. யாழ்ப்பாணப் பிரிவு சிலாபத்திலிருந்து தொடங்கி மன்னாரை உள்ளடக்கி வன்னிப்பிரதேசம், யாழ்ப்பாணக் குடாநாடு என்பனவற்றைக் கொண்டதாக முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை வரை பரந்தமைந்திருந்தது. இலங்கையின் வடபகுதி முழுவதையும் கொண்டதாகவும் கிழக்கு மாகாணம் முழுவதையும் கொண்டதாகவும் விளங்கியது. இவற்றின் நிர்வாகமையம் யாழ்ப்பாணக் கோட்டையாகவிருந்தது.

யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ள (யாழ்ப்பாணக் குடா நாடு முழுவதும்) காணிகள் மக்களுக்குரித்தான பரவணிக் காணிகளாகவிருந்தன. பரம்பரை பரம்பரையாக ஆண்டு அனுபவித்து வரும் காணிகள். ஆனால் வன்னிப் பிரதேசக் காணிகளில் பெரும்பகுதி அவ்வாறிருக்கவில்லை. அதனால் வன்னிக் காணிகளுக்கு ஒல்லாந்தக் கம்பனி உரிமை பாராட்டியது. ஒல்லாந்த ஆளுநரால் நியமிக்கப்பட்ட வன்னியர்கள் ஒல்லாந்தருக்குத் திறை செலுத்தி ஆண்டனர். வருடமொன்றுக்கு 30 யானைகள் திறை. அவற்றில் மூன்றிலிரண்டு ஆண் யானைகளாகவும் எஞ்சியவை பெண்யானைகளாகவும் ஒல்லாந்தருக்கு வன்னியரால் திறை செலுத்தப்பட்டன.

1662 ஆம் ஆண்டு ஒல்லாந்தக் கொமுசாறி றைக்ளோப் வன்ஹூன்ஸ் இலங்கை முழுவதற்கும் ஆளுநராக வந்தான். ஒல்லாந்தர் ஆளுநராகக் கொழும்பிலிருந்த அட்றியான் வன்டேர் மேய்டன் என்பவனிடமிருந்து அதிகாரத்தைப் பொறுப்பேற்றான். அவ்வாறு இலங்கை முழுவதற்கும் ஆளுநராக வருவதற்குமுன் யாழ்ப்பாணக்கோட்டையில் ஒரு சதி நடந்துள்ளது. யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஒல்லாந்தரைத் திறத்தி விட்டு, யாழ்ப்பாணக்கோட்டையை கைப்பற்ற பெரும் சதி நடந்துள்ளது. யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்து ஒல்லாந்தப் படை வீரர்களில் ஒரு பகுதியினரை இந்தியாவிற்கு, நாக பட்டினத்திற்கு அனுப்பி வைக்க நேர்ந்தது. நாகபட்டினத்தில் ஒல்லாந்தருக்கெதிரான கிளர்ச்சியொன்றினை முறியடிப்பதற்காக ஒல்லாந்தப் படை அங்கு சென்றது. அவ் வேளை யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றச் சதித்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது.

இச்சதித்திட்டத்தில் டொன்லூயிஸ் என்பவன் முதன்மை வகித்தான். ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது அங்கிருந்த போர்த்துக்கேயரில் சிலர் ஒல்லாந்தருக்கு விசுவாசமாக இருப்போமெனச் சத்தியம் செய்து கொடுத்திருந்தனர். (தொடரும்)

**செங்கை ஆழியான்**

---

# மீள்வாக்கெடுப்பு குறித்து மக்களிடையே ஆர்வம் குறைவடைந்து காணப்படுகிறது

## கண்காணிப்பாளர்கள் அறிவிப்பு

(கொழும்பு)

மீள் வாக்கெடுப்பு தொடர்பிலான மக்கள் ஆர்வம் வெகுவாக குன்றியுள்ளதென் தேர்தல் கண்காணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

இது வாக்களிப்பு வீதம் நியாயமானளவு குறைவடையக் கூடும் எனவும் தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் எவ்வித பயனும் கிட்டா தென ஒரு சாரார் கருதுவதே இதற்கு காரண மென கண்காணிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறெனினும் கடுமையான தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இதுவரையில் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. நாவலப்பிட்டி மற்றும் திருகோணமலை பிரதேசத்தில் நடைபெறவுள்ள மீள் வாக்கெடுப்பு முடிவுகள் நாளை அதிகாலை வேளைக்குள் அறிவிக்க முடியும் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளதுடன் அநேகமாக முதலாவது உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளை இன்றைய தினம் நள்ளிரவிற்கு முன்னதாக அறிவிக்க முடியும் என தெரிவித்துள்ளது.

மேலும் மாவட்டங்களில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகளை நாளை அதிகாலை வேளைக்கு முன்னதாக அறிவிக்க முடியும் என நம் பிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன் இதன்படி நாளையே வெற்றிபெறும் வேட்பாளர்களின் பெயர்களை வர்த்தமானியில் அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

---

# இத்தாலியில் இரு இலங்கையர்கள் கத்தியால் குத்திக் கொலை

## லங்காதீப செய்தி

இத்தாலியில் இரண்டு இலங்கையர்கள் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இத்தாலியின் இஸ்டோனியா மற்றும் வெனிஸ் ஆகிய நகரங்களில் இந்த படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிது.

இஸ்டோனியாவில் ஓய்வு பெற்ற 94 வயதான மேயர் ஒருவரைப் பராமரித்து வந்த 36 வயதான இலங்கைப் பணிப்பெண் ஒருவரை இலங்கையைச் சேர்ந்த இருவர் கத்தியால் குத்தி கொலை செய்துள்ளனர்.

குறித்த கொலையாளிகள் இதுவரையில் கைது செய்யப்படவில்லை. இதேவேளை வெனிஸில் இலங்கையைச் சேர்ந்த மற்றுமொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். கொலையுண்டவர் வத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் இந்தப் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒரு சந்தேக நபரை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மைக்காலமாக இத்தாலியில் சில இலங்கையர்கள் படுகொலை செய்யப்படுவது அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-6)

---

### சனசமூக நிலையத்தை குறித்த நேரத்தில் இயங்க வைக்கவும்

வடமராட்சி [illegible] முருகன் ஆலயத்திற்கு அருகில் உள்ள சனசமூக நிலையம் பி.ப. 3.00 மணிக்கு பின்னரே திறக்கப்படுவதால் வாசகர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே குறித்த நிலையத்தை காலையில் இருந்து இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (6-43)

# றோயல் கல்லூரி, கொழும்பு -07

## கல்வி பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை -2010

## வழிகாட்டல் பரீட்சை

## கணக்கீடு- பகுதி -I Accounting -Part -I

*1 மணித்தியாலங்கள்* *1Hours*

19. கடன் கொடுனர் கட்டுப்பாட்டுக் கணக்கு நிலுவையும், கடன்கொடுனர் பேரேட்டுப் பட்டியல் மொத்தமும் வேறுபட்டது. வேறுபாட்டிற்கான காரணங்கள் வருமாறு,
அ.வழங்குனர் சாகரவின் கணக்கு நிலுவை ரூபா 2000 குறைவாகக் கூட்டப்பட்டிருந்தது
ஆ.கொள்ளவனவுத் தினசேரி ரூபா 10000 குறைவாகக் கூட்டப்பட்டிருந்தது.
மேற்கூறப்பட்ட தவறுகளைத் திருத்துவதற்கு,

| கடன்கொடுனர் பேரேட்டு பட்டியல் மொத்தம் | கடன்கொடுனர் கட்டுப்பாட்டுக் கணக்கு நிலுவை |
|---|---|
| 1.ரூபா 12000 குறைத்தல் | ரூபா 10000 செலவு வைத்தல் |
| 2.ரூபா 2000 அதிகரித்தல் | ரூபா 10000 வரவு வைத்தல் |
| 3.ரூபா 2000 அதிகரித்தல் | ரூபா 10000 செலவு வைத்தல் |
| 4.ரூபா 2000 குறைத்தல் | ரூபா 10000 வரவு வைத்தல் |
| 5.ரூபா 2000 குறைத்தல் | ரூபா 20000 வரவு வைத்தல் |

20. வணிக நிறுவனம் 10% சதவீத வருமானம் பெறும் நோக்கில் ரூபா 100,000இனை நிதி நிறுவனத்தில் முதலீடு செய்தது.கணக்காண்டின் இறுதியில் வருமதி முதலீட்டு வருமானம் தொடர்பான கணக்கு வைத்தலானது,
1.உரிமை அதிகரிக்கும், சொத்தும் அதிகரிக்கும்.
2.உரிமை குறைவடையும்,சொத்தும் அதிகரிக்கும்
3.உரிமை அதிகரிக்கும் , பொறுப்பும் அதிகரிக்கும்
4.உரிமை,பொறுப்பு இரண்டும் குறைவடையும்
5.உரிமை மட்டும் குறைவடையும்

**வினா இலக்கம் 21 தொடக்கம் 30 வரையானவற்றுக்கு சுருக்கமாக விடையளிக்க.**

21. சொத்தொன்று பெறுமானத்தேய்விடுவது தொடர்பில் கருத்தில் கொள்ளப்படும் இரண்டு காரணிகளை தருக.
1.......................................................................................
2.......................................................................................

22. பங்குடமையொன்றின் இன்றியமையாத பண்புகளுள் நான்கினைக் குறிப்பிடுக.
1.......................................................................................
2.......................................................................................
3.......................................................................................
4.......................................................................................

23. நிகழத்தக்க பொறுப்புகள் நிதியறிக்கைகளில் எவ்வாறு பிரதிபலிக்கப்படும்?
.......................................................................................

24. அஞ்சு, பிந்து இலாபநட்டங்களை 5:3 என்றடிப்படையில் பகிரும் பங்காளர்கள், இப் பங்குடமையில் 1/3 பங்கு இலாப நட்டத்துடன் சிந்து சேர்த்துக்கொள்ளப்பட்டார். பங்குடமையில் புதிய இலாபநட்ட விகிதமாக அமைவது,
.......................................................................................

25. இருப்புதொடர்பாக வரலாற்றுக்கிரயம், தேறக்கூடிய நிகரபெறுமதி இவ்விரண்டில் எது குறைவோ அதனையே நிதியறிக்கைகளில் பிரதிபலிக்க வேண்டுமென குறிப்பிடும் எண்ணக்கரு,
.......................................................................................

26. பங்குடமையில் பங்காளர் ஒருவர் சேர்த்துக்கொள்ளும் போது நன்மதிப்பு மதிப்பிடுவதற்கான காரணம் யாது?
.......................................................................................

27. பங்குடமையில் இருந்து ஓய்வுபெறும் பங்காளருக்கு சேரவேண்டிய தொகை தொடர்பான தீர்ப்பனவுது யாது?
.......................................................................................
.......................................................................................

28. இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இற்கிணங்க காசுபாய்ச்சல் கூற்றில் காசுபாய்வை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
1.......................................................................................
2.......................................................................................
3.......................................................................................

29. இலங்கை கணக்கீட்டு நியமம் -18 இற்கிணங்க ஆதனம், பொறி,உபகரணம் எவ்வாறு வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது?
.......................................................................................
.......................................................................................

30. இருப்பு வரலாற்று கிரயத்தின் பிரிவுகளாக உள்ளடங்குவது,
1.......................................................................................
2.......................................................................................
3.......................................................................................

**வினா இலக்கம் 31 தொடக்கம் 35 வரையானவற்றுக்கு வெற்றிடங்களை பூர்த்தி செய்க.**

31. இரட்டைப் பதிவு முறைமை முழுமையாக கைவிடப்பட்ட கணக்கு வைப்பு முறைமை ...... ...................... எனக் குறிப்பிடப்படும்.

32. சங்கமொன்றின் ஆயுட்காலம் சந்தா பெறுவனவு தொடர்பான கணக்கு வைப்பானது குறித்த நிதியாண்டுக்குரிய தொகை மட்டும்.................................................. லும்,மிகுதி ..................................................யிலும் இடப்படும்.

33. தெரிவு செய்யப்பட்ட கணக்கீட்டு முறையொன்றை தொடர்ந்து பின்பற்றுதல் .................. ................எண்ணக்கரு எனப்படும்.

34. பங்குடமையில் பங்காளர் மூலதனவட்டி, பங்காளர் சம்பளங்கள், பங்கிலாபங்கள் சீராக்கப்படுவது ................................... லும், ..............................லும் ஆகும்.

35. பரீட்சை மீதி வேறுபடாதமைக்கு ஏதுவான காரணங்களாக குறிப்பிடுவதில் இரண்டு ................................... , ..................................................ஆகும்.

**வினா இலக்கம் 36 தொடக்கம் 40 வரையாவை உண்மை அல்லது. பொய் எனக் குறிப்பிடின் போதுமானது.**

36. வணிக நிறுவனத்தில் ஒரு முறை தெரிவு செய்யப்பட்டு பின்பற்றிய கணக்கீட்டு முறையொன்றைப் பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்ற முடியாது. (..................)

37. சில்லறைச் செலவு காசேடானது ஒவ்வொரு மாதமுடிவிலும் நிலையான தொகையொன்றினால் செலவு மீள் நிரம்பல் செய்யப்படும். (............................)

38. நிலம் எப்பொழுதும் பெறுமானத் தேய்விட முடியாத ஆதனமொன்றாக இனங் காணப்படும். (....................................)

39. வருமான இனங்காணல் எண்ணக்கருவின்படி வருமானம் உழைக்கப்படுகின்றபோது இனங்காணப்படுவதேயன்றி அவை காசாக வசூலிக்கப்படும் போதல்ல (.......................)

40. இலங்கை கணக்கீட்டு நியமம் 05 இன்படி இருப்பு விலையிடுவதற்கு முதல் வந்தது முதல் வெளியேறல் முறையையும் நிறையளித்த சராசரி விலையிடல் முறையும் சிபாரிசு செய்யப்படுகின்றது (....................................)

## கணக்கீடு :- பகுதி I-II

**முதலாம் வினா கட்டாயமானது. எல்லாமாக 05 வினாக்களுக்கு விடையளிக்குக.**

1. தேவிகா, சிரானி, தம்மிக பங்குடமையொன்றில் ஈடுபடுபவர்களாவர். கீழ்வரும் உடன்படிக்கையை பங்குடமை ஸ்தாபனம் கொண்டிருந்தது.
1.தேவிகா, சிரானி, தம்மிக இலாபநட்டங்களை 5:3:2 என பகிர்வர்
2.மூலதனம் தொடர்பாக ஆண்டிற்கு 10%சதவீதவட்டி தாக்கல் செய்யப்படும்
3.ஒவ்வொரு பங்காளரும் மாதம் ரூபா 1000 சம்பளத்திற்குரியவர்கள்
5.எடுப்பனவுகள் தொடர்பாக ஆண்டுக்கு 10% வட்டி அறவீடு செய்யப்படும்.

2008 டிசம்பர் 31இல் தம்மிக்க பங்குடமையில் இருந்து ஓய்வு பெற தீர்மானித்தார். தேவிகா,சிரானி இலாபநட்டங்களை சமமாக பகிரத் தீர்மானித்ததுடன் ஏனையவை தொடர்பில் முன்னைய உடன்படிக்கையை மாற்றமின்றி பின்பற்றத் தீர்மானித்தனர்.

2009.06.30 இல் பெறப்பட்ட பரீட்சை மீதி வருமாறு ரூபா '000' களில்

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| மொத்தம் இலாபம் | | 450 |
| ஊழியர்வேதனம் | 15 | |
| எழுதுகருவி காகிதாதி | 3 | |
| பங்காளர் சம்பளங்கள் | 18 | |
| விளம்பரக்கட்டணம் | 12 | |
| வங்கிக்கட்டணம் | 1 | |
| இறைவரி கட்டணம் | 2 | |
| வாடகை கட்டணம் | 6 | |
| தளபாடமும்,உபகரணமும் -கிரயத்தில் | 200 | |
| மோட்டார் வாகனம் -கிரயத்தில் | 250 | |
| கணனி -கிரயத்தில் | 20 | |
| வாடகை வருமானம் | | 18 |
| நன்மதிப்பு | 40 | |
| பொது ஒதுக்கீடு | | 10 |
| பங்காளர் நடைமுறைகணக்கு | | |
| தேவிகா | | 2 |
| சிரானி | | 8 |
| தம்மிக | | 10 |
| திரண்ட தேய்மானம் (2008.07.01)வரை | | |
| தளபாடமும் உபகரணமும் | | 36 |
| மோட்டார் வாகனம் | | 70 |
| கணனி | | 6 |
| வியாபார கடன்படுனர் | 40 | |
| ஐயக்கடன் ஏற்பாடு 2008.07.01 வரை | | |
| வியாபாரக்கடன் கொடுனர் | | 4 |
| எடுப்பனவுகள் -தேவிகா | 12 | 40 |
| -சிரானி | 5 | |
| வணிக கையிருப்பு (2009.06.30)இல் -கிரயம் | 8 | |
| கங்காளர் மூலதனகணக்கு 2008.07.01 இல் | | |
| தேவிகா | | 80 |
| சிரானி | | 60 |
| தம்மிக | | 40 |
| காசு வங்கி மீதி | 202 | |
| | 834 | 834 |

மேலதிக தகவல்கள் :-

1. 2009 யூன் 30 இல் வியாபார கையிருப்பின் தேறக்கூடிய நிகரபெறுமதி ரூபா 6000

2. 2008.டிசம்பர் 31 இல் ரூபா 2000 பெறுமானமுள்ள பண்டங்களை தேவிகா சொந்த நுகர்வுக்கு எடுத்தமை தொடர்பாக எப்பதிவும் ஏடுகளில்லை.

3. கடன்படுனரில் ரூபா 2000 ஐ அறவிடமுடியாக்கடனாக பதிவழிக்க எஞ்சிய தொகையில் 10% சதவீதமாக ஐயக்கடன் ஏற்பாடு செய்க. அறவிடமுடியாக்கடன் ஐயக்கடன் ஏற்பாடு கணக்கினூடாக சீராக்கப்படும்.

4. 2006.ஒக்டோபர் 01 இல் ரூபா 50000ற்கு கொள்வனவு செய்த மோட்டார் வாகனம் 2008 டிசம்புர் 31 இல் ரூபா 40000ற்கு விற்பனை செய்யப்பட்டது.விற்பனையால் பெற்ற பணம் மோட்டார் வாகனக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதைத் தவிர வேறு சீராக்கம் இடம்பெறவில்லை.

5. தம்மிக ஓய்வு பெறும் பொழுது நிலையான சொத்துக்கள் பின்வரும் விலையில் மீள் விலைமதிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| தளபாடமும் உபகரணங்களும் | ரூபா | 175000 |
| மோட்டார் வாகனம் | | 170000 |
| கணனி | | 10000 |

மீளவிலைமதித்தல் பெறுமதியில் சொத்துக்கள் ஏடுகளில் பிரதிபலிக்கப்படும்.

6. கணனி மீளவிலைமதித்தல் பெறுமதியில் தம்மிகவினால் பொறுப்பேற்கப்பட்டது.

7.சகல நிலையான சொத்துக்களும் நேர் கோட்டுமுறையில் 10% சதவீதம் தேய்விடப்படுவதுடன் மீளவிலைமதித்தலின் பின்னர் நேர்கோட்டுமுறையில் 15 % மீளவிலை மதித்தல் பெறுமதியில் மேற்கொள்ளப்படும்.

8.தேவிகாவின் எடுப்பனவுகளானது ஒவ்வொருமாத முதற்திகதியிலும் ரூபா 1000 படி வருடம் முழுவதும் கிரமமாக இடம்பெற்றிருந்தது.

9.தம்மிக ஓய்வு பெறும் போது பங்குடமையின் நன்மதிப்பு ரூபா 60000ற்கு மதிப்பிடப்பட்டதுடன் தேவிகா, சிரானி நன்மதிப்பு கணக்கு பராமரிப்பதில்லை என தீர்மானித்தனர்.

10.தம்மிகவிட்கு செலுத்தவேண்டிய தொகையில் ரூபா 10000காசாக செலுத்தவும். மிகுதியை ஆண்டுக்கு 10%சதவீத வட்டி செலுத்தக்கூடிய கடன்கணக்கிட்டு மாற்றவும் பங்காளர்கள் முடிபு செய்தனர்.

11. பொது ஒதுக்கீடு தொடர்ந்தும் பராமரிக்கப்படமாட்டாதென கொண்டதுடன், குறிப்பிட்டு சொல்லப்பட்ட செலவுகளும், வருமானங்களும் தவிர்ந்த ஏனைய அனைத்து கால அடிப்படையில் எழுந்தன எனக் கொள்க.

தேவைப்படுவது:-
1. 2009.06.30 இல் முடிவுற்ற ஆண்டிற்கான இலாபநட்டக்கணக்கும், இலாபநட்டபகிர் கணக்கும்.
2. பங்காளர் மூலதன கணக்கு (நிரல் வடிவில்)
3.பங்காளர் நடைமுறைகணக்கு (நிரல் வடிவில்)
4. மறுபடி விலைமதித்தல் கணக்கு
5. புதிய பங்குடமையின் ஐந்தொகை.

(20 புள்ளிகள்)

2.அ) யசோதரா பொதுகம்பனி பிரபல்யமான அச்சகமாகும். கம்பனி ஆதனம் பொறி உபகரணம் தொடர்பாக பின்வரும் கொள்கையை கடைப்பிடித்து வருகிறது.
i.கணக்காண்டு ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 31இல் முடிவடைகிறது.
ii.பெறுமானத்தேய்வு நேர்கோட்டு முறையில் இடப்படுகிறது.
iii.கம்பனி கொள்வனவு செய்யும் வருடங்களில் பெறுமானத்தேய்வினை தாக்கல் செய்யாது முடிவுறுத்தல் ஏதேனும் நிகழுமாயின் ஒரு முழுவருடத்திற்கு பெறுமான தேய்வினை தாக்கல் செய்யும்.

பின்வரும் தகவல்கள் ஆதனம் தொடர்பாக பெறப்பட்டன. கம்பனி ரூபா 50000 பெறுமதியான அச்சு இயந்திரமொன்றை ஜப்பானிலிருந்து 30.06.2005 இல் இறக்குமதி செய்தது. பின்வரும் மேலதிக செலவுகள் இடம்பெற்றன.

| | |
|---|---|
| சுங்க கட்டணம் | ரூபா 15000 |
| மீளமைத்தல் செலவு | 10000 |
| கப்பல் கேள்வு | 25000 |

இயந்திரத்தின் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் 05 ஆண்டுகள். மதிப்பிடப்பட்ட எஞ்சிய பெறுமதி ரூபா 5000.
ஜனவரி 2008 இல் ரூபா 5000 செலவு செய்தது. இதனால் ஆதனத்தின் ஆயுட்காலம் மேலும் 02 வருடங்களால் அதிகரிக்குமென்றும் ஆனால் எஞ்சிய பெறுமதியில் எத்தகைய மாற்றமுமில்லை என கண்டறியப்பட்டது.
2006.11.01 இல் கம்பனி ரூபா 60000 கிரயமுடைய இன்னுமொரு இயந்திரத்தை கொள்வனவு செய்தது. இதன் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் 05 ஆண்டுகள். எஞ்சிய பெறுமதி ரூபா 10000.

தேவைப்படுவது:-
1. 2008. டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான
i.இயந்திர கணக்கு
ii.இயந்திர திரண்ட தேய்வு கணக்கு
iii.இலங்கை கணக்கீட்டு நியமம் -18இன்படி ஆதனம் பொறி உபகரணம் தொடர்பான 02 வெளிப்படுத்தல்கள் தருக.

(06 புள்ளிகள்)

ஆ. கமால் சிறீ. கம்பனியின் 2009 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 20000 என கணிக்கப்பட்டிருந்தது. பின்வரும் சீராக்கங்கள் தேறிய இலாபத்தை கணிப்பிடுவதில் கருத்திற்கொள்ளப்படவில்லை.
1.2009 டிசம்பர் 31 இல் மீதமாயிருந்த எழுதுகருவி இருப்பின் பெறுமதி ரூபா 20000
2.அட்டுறு கட்டட வாடகை ரூபா 20000 கருத்திற் கொள்ளப்படவில்லை.
3.கம்பனி 01.10.2009 தொடக்கம் 2011.12.31 இல்,முடிவுறும் காலப்பகுதிக்கென விளம்பர கட்டணமாக ரூபா 27000 செலுத்தியிருந்தது. செலுத்திய முழுதொகையும், கணக்கு எழுதுவினைஞரால் விளம்பர கட்டணம் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

தேவைப்படுவது:
2009.12.31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சீராக்கிய இலாபத்தை கணிக்கும் கூற்று.

(04 புள்ளிகள்)
(10 புள்ளிகள்)

03. அ.2008 ஏப்ரல் முதல் வாரத்தில் அத்துல வணிகத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு,
1. கடன்படுனரிடம் வசூலித்த காசு ரூ 3750
2. பொருள் வழங்குனர்களிடம் ரூபா 55000 கிரயமுடைய பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டது.
3. இசார மோட்டார் கம்பனியில் ரூபா 280000 பெறுமதியான மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது.
4. வணிகத்தினால் ரூபா 500 பெறுமதியான எழுதுகருவிகள் பயன்படுத்தப்பட்டது.
5. குறித்த வாரத்திற்கான விற்பனை வருமானம் ரூபா 35000
6.அத்துல தனது சொந்த நுகர்வுக்கென ரூபா 4200 ஐ பற்றுச் செய்திருந்தார்.

தேவைப்படுவது:-
மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை ஐந்தொகை சமன்பாட்டில் அதிகரிப்பு (+), குறைவு (-) என குறித்துக்காட்டுக.

(06புள்ளிகள்)

ஆ. பின்வருவன 02 வேறுபட்ட தனிவியாபாரங்கள் தொடர்பானவை

| | கோகிலா டிரேடர்ஸ் | குமரா ஸ்ரோர்ஸ் |
|---|---|---|
| 2008. டிசம்பர் 31 இல் | | |
| நடைமுறை,நடைமுறையல்லாத சொத்துக்கள் ரூபா | 12000 | ரூபா 9000 |
| நடைமுறை,நடைமுறையல்லாத பரிப்புகள் ரூபா | 7000 | ............. |
| 2009 டிசம்பர் 31 | | |
| நடைமுறை,நடைமுறையல்லாத சொத்துக்கள் ரூபா | 15000 | 12000 |
| நடைமுறை,நடைமுறையல்லாத பரிப்பு ரூபா | 9000 | 1550 |
| 2009 ஆண்டில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் | | |
| ஈடுபடுத்திய மேலதிக மூலதனம் ரூபா | 1500 | 2400 |
| எடுப்பனவுகள் ரூபா | 1000 | 1000 |
| தேறிய இலாப /நட்டம் | ............... | 1600 |

தேவைப்படுவது:-
மேற்கூறிய அட்டவணையில் வெற்றிடங்களை பூர்த்தி செய்க.

இ கொழும்பின் பிரபல ஆடைதொழிற்சாலை தனது பூர்த்தி பண்டங்களையும், புத்துருவாக்கும் வேலையினையும் கிரயத்தில் மதிப்பிடுவதுடன் மூலப்பொருள் பயன்படுத்திய கிரயத்தை மதிப்பிட எளிய சராசரி விலையிடல் முறையினையும் கடைப்பிடிக்கின்றது.

தேவைப்படுவது:-
இலங்கை கணக்கீட்டு நியமம் 05 ற்கிணங்க புத்துருவாகும் வேலை, மூலப்பொருள், கிரயம் தொடர்பாக மீறப்பட்ட எண்ணக்கருக்கள்,கொள்கைகள் என்பனவற்றை குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)
(10 புள்ளிகள்)

04. அ. மாலித் வணிகத்தின் ஜனவரி மாத கடன்படுனர்பேரேடு சில வருமாறு,

அனில் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 01/01 மீதி வந்தது | 3000 | காசு | 9500 |
| விற்பனை | 27000 | அனுமதித்த கழிவு | 500 |
| | | மீதி சென்றது | 20000 |
| | 30000 | | 30000 |

சிசில் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 01/01 மீதி வந்தது | 8000 | விற்பனை திரும்பல் | 3000 |
| 18/01 விற்பனை | 22000 | காசு | 14000 |
| | | அனுமதித்த கழிவு | 1000 |
| | | மீதி சென்றது | 12000 |
| | 30000 | | 30000 |

பஸல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 01/01 மீதி வந்தது | 12000 | விற்பனை திரும்பல் | 2000 |
| விற்பனை | 9000 | காசு | 8000 |
| | | அனுமதித்த கழிவு | 1000 |
| | | மீதி சென்றது | 10000 |
| | 21000 | | 21000 |

சிறில் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 01/01 மீதி வந்தது | 10000 | அறவிடமுடியா கடன் | 4500 |
| வட்டி | 500 | மீதி சென்றது | 6000 |
| | 10500 | | 10500 |

மேற்கூறப்பட்ட தகவல்களை கருத்திற் கொண்டு பின்வருவனவற்றை தயாரிக்க .

1.விற்பனை தினசேரியும், விற்பனை திரும்பல் தினசேரியும்
2.பொது பேரேட்டில் விற்பனை கணக்கும், கடன்படுனர் கட்டுப்பாட்டு கணக்கும்
3.சிறிலின் நிலுவை தொடர்பாக 50%மும், எஞ்சியோர் தொடர்பாக 10 % சதவீதமும் தொடர்பான ஐயக்கடன் ஏற்பாடு செய்வதற்கான குறிப்பேட்டு பதிவும் ,பேரேட்டு கணக்குகளும்.

(06 புள்ளிகள்)

ஆ.பின்வரும் பேரேட்டு மீதிகள் ஜானகி கம்பனியின் 2008ஏப்ரல் 01 இல் பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.
வியாபார கடன்படுனர் ரூபா 40ஆயிரம். அறவிடமுடியாகடனும் ஐயக்கடனுக்குமான ஏற்பாடு ரூபா 6000. கம்பனியின் கொள் கையானது அறவிட முடியாக்கடன்களை ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கினூடாக பதி வழித்தலாகும். 2009 மார்ச் 31 இல் உள்ள கடன்படுனரில் ரூபா 1500ஐ அறவிட முடியாகடனாக பதிவழிக்க எஞ்சிய தொகையில் ரூபா 10000 தொடர்பாக 40% சதவீதம் விஷேட ஏற்பாட்டினையும்,மிகுதியில் 05% சதவீதம் பொது ஏற்பாட்டினையும் ஐயக்கடன் ஏற்பாடாக பராமரித்தது.

தேவைப்படுவது:-
1.2009 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கடன்படுனர் கட்டுப்பாட்டுகணக்கு
2.அறவிடமுடியா ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு

(04 புள்ளிகள்)

# விகிர்தி வருடம் உங்களுக்கு எப்படி?

## கன்னி

**(உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்)**

**இனிமையாகப் பேசி எல்லோர் மனதிலும் இடம்பிடிக்கும் கன்னி ராசி நேயர்களே!**

விகிர்தி வருடம் பிறந்துள்ளது. உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் விதத்தில் இலாபாதிபதி சந்திரன் உங்கள் இராசியைப் பார்க்கிறார். தனாதிபதி சுக்ரன் இராசிநாதன் புதனோடு இணைந்து தனது வீட்டையே பார்வையிடுகிறார். நான்கு கேந்திரங்களிலும் கிரகங்கள் இருந்து 'விகிர்தி' பிறந்துள்ளது.

எனவே, பொருளாதார நிலை உயர்ந்து போற்றுகிற அளவிற்கு வாழ்க்கைத் தரம் உயரும். ஜென்மச் சனியின் ஆதிக்கம் மட்டும் இல்லாமல் இருந்தால் இன்னும் சிறப்பான பலன்களை மற்ற கிரகங்கள் அள்ளி வழங்கும்.

வருடத் தொடக்கத்திலேயே ஜென்மச் சனி வக்ரம் பெறுகிறார். எனவே கொடுக்கல் வாங்கல்களில் சிறு சிறு பிரச்சினைகள் உருவாகத்தான் செய்யும். இராசிநாதனாக புதன் அமைவதால் வரும் பகையை வாக்கு சாமர்த்தியத்தால் மாற்றிக் கொள்வீர்கள்.

சித்திரை 19 ஆம் திகதி குரு பெயர்ச்சிக்கு பிறகு நினைக்க இயலாத ராஜயோகம் வந்து சேரப் போகிறது. நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

நிச்சயித்த காரியங்கள் நிச்சயித்தபடியே நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். கூட்டு முயற்சிகளில் ஏற்பட்ட ஏமாற்றங்கள் மாறும். குருவின் வக்ர இயக்க காலத்தில் மட்டும் குடும்ப பிரச்சினைகள் உருவாகலாம்.

குலப் பெருமையையும், குடும்பப் பெருமையையும் பேசுவதில் அதிக பிரியம் கொண்டவர்கள் நீங்கள் தான். உங்கள் இராசிநாதன் புதன் "மாமன் காரகன்" என்று வர்ணிக்கப்படுகிறார்.

அது மட்டுமல்ல, ''வித்யாகாரகன்'' என்றும் சொல்லப்படுகிறார். எனவே, சகல கலைகளையும் தெரிந்து வைத்திருந்தாலும், தெரியாதவரைப் போலவே தோற்றமளிப்பீர்கள்.

எந்தச் சூழ்நிலை அமைந்தாலும், வாக்குறுதி கொடுத்து விட்டால் அதிலிருந்து மாற மாட்டீர்கள். சடங்கு, சம்பிரதாயங்களில் அதிக நம்பிக்கை வைப்பீர்கள்.

புதனின் பலத்தைப் பொறுத்தே உங்கள் வாழ்க்கையின் அமைப்பை அறிந்து கொள்ளலாம். பொதுவாக சுய ஜாதகத்தில் புதன், சுக்ரன், சந்திரன் ஆகியவற்றின் பலமறிந்து செயல்பட்டால் எடுத்த செயல்களில் எளிதில் வெற்றி காணலாம். பத்து பொருத்தங்களில் மூத்தான பொருத்தங்கள் பலவும் இருந்தால் தான் வாழ்க்கைத் துணையால் வளர்ச்சி கூடும்.

உங்கள் சுய ஜாதகத்தில் யோகம் தரும் கிரகம் எது என்பதை ஆராய்ந்து பார்த்து அதன் பாதசார அடிப்படையில் கிரகத்திற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும், உங்கள் தொழில் நிலையத்தின் பெயரையும் அமைத்துக் கொண்டால் பொன்னான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள இயலும்.

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே சனி வக்ரம் பெறுகிறார். ஐந்தாமிடம் மற்றும் ஆறாமிடத்திற்கு அதிபதியான சனி வக்ரம் பெறுவதால் குடும்பச் சுமை கூடும். குழந்தைகள் வழியில் செலவுகள் அதிகரிக்கும்.

உங்கள் சொல்கேட்டு பிள்ளைகள் நடப்பார்களா என்பது சந்தேகம் தான். வியாபாரப் போட்டிகள் ஏற்படலாம். விலையேற்ற தொல்லையால் கவலைப்படுவீர்கள்.

இலாபாதிபதி சந்திரன் உங்கள் இராசியைப் பார்ப்பதால் பொருளாதார பற்றாக்குறை ஏற்படாது என்றாலும், வரவைக் காட்டிலும் செலவு கூடும். ஒரே காரியத்தை இரு முறை செய்யும் சூழ்நிலை ஒருசிலருக்கு உருவாகலாம்.

வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படும் பொழுதெல்லாம் வழிபாடுகள் தான் உங்களுக்கு கைகொடுக்கும். எனவே எந்தெந்த காலங்களில் எந்தெந்த ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வரவேண்டுமோ, அந்தந்த காலங்களில் அந்தந்த ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால், சிந்தனைகள் அனைத்தும் வெற்றி பெறத் தொடங்கும். சீரான வாழ்க்கையும் அமையும்.

இதுவரை ஆறாமிடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் மீன இராசியில் ஏழாமிடத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியைப் பார்க்கப் போகிறார்.

எனவே ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அனைத்து காரியங்களிலும் வெற்றி கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். கல்யாணக் கனவுகள் நனவாகும். கோவில் பிரார்த்தனைகளால் எல்லாம் நல்ல விதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று சொல்லி மகிழ்வீர்கள்.

''ஏழில் குருவந்தால் எதிர்காலம் சிறப்படையும்! வாழ்வில் வசந்தம் வரும்! வருமானம் பெருகி விடும்! சூழும் பகை விலகும்! சுற்றமெல்லாம் பாராட்டும்! கோள்கள் குறுக்கிட்டால், குரு பார்வை தவிர்த்துவிடும்!''

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது இயல்பான வாழ்க்கையில் இனிய மாற்றங்கள் தான் வரப்போகிறது. எதிர்காலம் நலமடைய தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். 1,3,5 ஆகிய இடங்களில் குருவின் பார்வை பதிவதால், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். உடல் நலம் சீராகும். சகோதர வழி சச்சரவுகள் தீரும். கௌரவம், புகழ் கூடும்.

நான்காமிடத்தில் இராகுவும் பத்தாமிடத்தில் கேதுவும் சஞ்சரிப்பதால் தாயின் உடல் நலம் சீராகும். தக்க விதத்தில் சொத்துக்கள் வந்து சேரும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். இக்காலத்தில் சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்தால் சந்தோஷங்களை நாளும் வரவழைத்துக் கொள்ளலாம்.

இதுவரை உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வந்த சனிபகவான் இனியும் தொடர்ந்து உங்கள் இராசியிலேயே ஆண்டு முழுவதும் சஞ்சரிக்கப் போகிறார். இருப்பினும் ஆண்டின் தொடக்கத்தில் வக்ரம் பெறுகிறார். இந்த வக்ர இயக்கம் அவ்வளவு நல்லதல்ல. ஐந்து, ஆறுக்கு அதிபதியாக சனி விளங்குவதால் பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் உருவாகலாம்.

அவர்களின் படிப்பு சம்பந்தமாகவோ தொழில் சம்பந்தமாகவோ ஒரு தொகையைச் செலவழிக்க முன்வருவீர்கள். வாரிசுகளிடம் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

வருடக் தொடக்கம் முதல் வைகாசி 12 வரை சனி வக்ரம் பெறுகிறார். மீண்டும் தை 8 ஆம் திகதி முதல் பங்குனி 30 ஆம் திகதி வரை சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். இக்காலத்தில் வீடு மாற்றம், உத்தியோக மாற்றம், ஊர் மாற்றம் போன்றவைகள் உருவாகலாம். அதிகாரிகளை அனுசரித்துச் சென்றால் தான் அலுவலகப் பணிகளை துரிதமாக முடிக்க இயலும்.

உடன் பணி புரிபவர்களே உங்களுக்கு எதிரியாக மாறலாம். கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவதுடன் சனிபகவான் வழிபாட்டையும் அனுமன் வழிபாட்டையும் மேற்கொண்டால் சஞ்சலங்கள் தீரும்.

பொதுவாக கன்னி இராசிக்கு 3, 8 க்கு அதிபதியாக செவ்வாய் விளங்குகிறார். அவை பலம் பெறும் நேரத்தில் திடீர் சிக்கல்களும் சிரமங்களும் உருவாகலாம். உறவினர்களும், உடன் பிறப்புகளும் பகையாகலாம். அந்த நேரம் தான் மார்கழி 22 முதல் தை 29 வரை அந்த நேரத்தில் மகரத்தில் செவ்வாய் உச்சம் பெறுகிறார்.

பூமி வாங்குவதில் பிரச்சினைகள் உருவாகலாம். பத்திரப்பதிவிலும் சிக்கல்கள் ஏற்படும். சேமிப்புகள் கரையலாம். அங்காரக வழிபாடு அல்லல்களைத் தீர்க்கும்.

சித்திரை மாதம் 19 ஆம் திகதி (02.05.2010) முதல் ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி (06.11.2010) வரை மீன இராசியில் அதிச்சாரமாக குரு சஞ்சரிக்கப் போகிறார். ஐப்பசி 21 ஆம் திகதி (07.11.2010) முதல் கார்த்திகை 4 ஆம் திகதி (20.11.2010) வரை கும்ப இராசியில் குரு வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கிறார். கார்த்திகை 5 ஆம் திகதி மீண்டும் மீன இராசியில் குரு முறையாகச் சஞ்சரிக்கப் போகிறார். இந்தப் பொன்னவன் குருவின் சஞ்சாரம் என்னென்ன மாற்றங்களை உருவாக்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

வருடத் தொடக்கத்தில் ஆறாமிடத்தில் குரு சஞ்சரித்து வருகிறார். அங்கிருந்தபடியே 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே குடும்பத்தில் சுப விரயங்கள் அதிகரிக்கும். மக்கட் செல்வங்களின் முன்னேற்றத்திற்காக செலவிடுவீர்கள்.

தொழிலில் இடம் மாறலாமா? என்ற சிந்தனை மேலோங்கும். தெசாபுத்தி பலம் பெற்றிருந்தால் மட்டுமே இடமாற்றங்களை உபயோகப்படுத்திக் கொள்வது நல்லது. வியாபாரத்தில் போட்டி கடைகள் உருவாகலாம்.

அரசு வழியில் மற்றும் வங்கிகளில் கடன் கிடைத்து வீடு கட்டும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

புதன்கிழமை தோறும் விஷ்ணுவையும் அனுமனையும் வழிபட்டு வாருங்கள்.

விகிர்தி வருடத் தொடக்கத்தில் விரயங்கள் கூடலாம். குடும்பத்தில் செலவு நடைகள் அதிகரிக்கும். தாய் மற்றும் சகோதரி வழியில் பிரச்சினைகள் ஏற்படாமல் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. விலை உயர்ந்த பொருட்களை கையாளுவதில் கவனம் தேவை. குருப்பெயர்ச்சிக்கு பிறகு சாதகமான நிலை உருவாகிறது.

**சிவல்புரி சிங்காரம்**

அதன் பிறகு சச்சரவுகள் தீரும். சமரசங்கள் உருவாகும். அச்சமில்லாத வாழ்க்கைக்கு அடித்தளமிடுவீர்கள். கணவன், மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். தை மாதத்திற்கு மேல் இல்லத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். சுகஸ்தான இராகு பலம் பெறுவதால் சர்ப்ப சாந்திகளை செய்து சந்தோஷத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள். (தொடரும்)

# மக்களை பிழையான வழிகளில் இட்டுச்செல்ல சிலர் முயற்சி

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

மக்களை பிழையான வழியில் இட்டுச் செல்ல சிலர் முயற்சிப்பதாக பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாவலப்பிட்டி மற்றும் கும்புறுப்பிட்டி நிலவரம் தொடர்பில் பிழையான தகவல்கள் பிரசாரம் செய்யப்பட்டு வருவதாக தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.

குறித்த பிரதேசங்களில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் பீதி நிலவுவதாகவும் சிலர் பிரசாரம் செய்து வருவதாகவும் அங்கு மிகவும் சுமூகமான நிலைமை நிலவுவதாகவும் வாக்காளர்கள் எவ்வித அச்சமுமின்றி வாக்களிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் முறைகேடுகள் இடம்பெற்ற காரணத்தினால் கும்புறுபிட்டிய மற்றும் நாவலப்பிட்டி ஆகிய பிரதேசங்களுக்கான வாக்கெடுப்பு சூன்யமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# நாளை மறுதினம் நாடாளுமன்றில் ஜனாதிபதி ஆற்றவிருந்த விசேட உரை இரத்து

(கொழும்பு)

நாளை மறுதினம் நாடாளுமன்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றவிருந்த விஷேட உரை கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதனைப் போன்று நாடாளுமன்ற அமர்வுகள் குறித்த திகதியில் ஆரம்பமாகும் எனக் குறிப்பிடப்படுகிறது.

ஜனாதிபதியின் விசேட உரையும் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன வெளியீடும் வேறு ஓர் தினத்தில் முன்வைக்கப்படும் எனவும் இலங்கையின் ஏழாவது நாடாளுமன்றம் நாளை மறுதினம் (வியாழன்) காலை 8.45 மணிக்கு கூடவுள்ளதாகவும் நாடாளும்ன்ற உறுப்பினர்களின் பதவிப் பிரமாணம் மற்றும் சபாநாயகர், பிரதி சபாநாயகர் தெரிவு ஆகியன நடைபெறும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இதற்கமைய பதவி நியமனங்களின் பின்னர் எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி வரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படவுள்ளதாக லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (2-6)

# அரச நிறுவனங்களில் அமைப்பு ரீதியான மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்

## ஐ.தே.க. அறிவித்துள்ளது

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் அமைப்பு ரீதியான மாற்றம் அவசியமென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ரயில்வே திணைக்களம், போக்குவரத்து சபை போன்றவற்றில் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய அமைப்பு ரீதியான மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் வேட்பாளரும், சிரேஷ்ட பொருளியல் நிபுணருமான ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

பிழையான வர்த்தக அணுகுமுறைகள் மற்றும் அரசியல் மயப்படுத்தல்களினால் அரச நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததென அவர் சுட்டிக்காட்டியள்ளார். (6)

# மலக்குடல் புற்றுநோயும், சிகிச்சை முறையும்...

### மலக்குடல் புற்றுநோய் எவ்வாறு ஏற்படுகிறது?

நம் ஆசன வாயிக்கு சற்று உள்ளே இருக்கும் பகுதிதான் மலக்குடல் (Rectum) இது பெருங்குடலின் கடைசிப் பகுதி என்றாலும் குடல் புற்றுநோய் பெரும்பாலும் தாக்குவது மலக்குடலைத்தான். காரணங்கள் பல இருந்தாலும் நாம் முதலில் பார்க்க வேண்டியது உணவு முறைகளைத்தான்.


அதிகாரம் மற்றும் கொழுப்புச் சத்து மிகுந்த உணவு, நார்ச்சத்து இல்லாத உணவு, விற்றமின் மற்றும் தாதுப்பொருட்கள் இல்லாத உணவு வகைகள் இப்படி பல உணவுப் பழக்க முறைகளால் மலக்குடல் மற்றும் பெருங்குடல் புற்றுநோய் வர வாய்ப்புள்ளது.

சுமார் 15 சதவிகிதம் சர்க்கரை, இரத்தக் கொதிப்பு போன்று குடும்பத்தில் வம்சாவழியாக வருவதற்கும் வாய்ப்புண்டு.

### இதை எப்படி கண்டுபிடிப்பது?

ஒரு சிறு அரும்பு எப்படி பூவாகி, காயாகி, கனியாகிறதோ அதேபோன்று புற்றுநோய் கட்டியும் ஒரு செல்லில் உருவாகி வளர்ந்து கட்டியாகி, புண்ணாகி மற்ற இடங்களுக்குப் பரவும். ஆரம்பத்தில் கண்டுபிடிப்பது சற்று சிரமம் என்றாலும் சிறு சிறு தொந்தரவுகளை அலட்சியப்படுத்தக் கூடாது. குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால் மலச்சிக்கல், மலம் கழிக்கும்போது இரத்தம் போகுதல், அடிவயிறு வலித்தல், மலம் கழித்தபின் ஒரு வித வலி போன்ற அறிகுறிகள் இருந்தால் உடனே மருத்துவரை அணுகி பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

மலத்தில் இரத்தம் போவதற்கு மூலம் தான்



காரணம் என நினைத்து நிறையப் பேர் அலட்சியப்படுத்தி விடுகின்றனர். அவ்வாறு செய்யும்போது புற்றுநோய் கட்டி வேகமாக வளர்ந்து மலக்குடலை அடைத்து மற்ற இடங்களுக்கு பரவ நாமே இடம் கொடுத்து விடுகிறோம்.

### இதைக் கண்டுபிடித்து எவ்வாறு குணப்படுத்துவது?

மேலே கூறிய தொந்தரவுகள் இருந்தால் குடல் உள்நோக்கி (Endoscopy) மூலம் கட்டியை கண்டுபிடித்து சதை டெஸ்டும் எடுக்கலாம். அவ்வாறு கண்டறியப்பட்ட மலக்குடல் புற்றுநோய் எந்த நிலையில் உள்ளது என சிஜி ஸ்கேன் மூலம் தெரிந்து அதற்குத் தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும். அறுவைச் சிகிச்சை செய்து கட்டியை முழுவதும் அகற்றி விடலாம்.

### மலக்குடலில் அறுவைச் சிகிச்சை என்றால் குடலை வெளியே வைப்பார்களா?

எல்லா மலக்குடல் புற்றுநோய்க்கும்குடலை வெளியே வைக்க வேண்டியிருக்காது. அதுவும் லேப்ராஸ்கோபி சிகிச்சை முறையில் கட்டி இடுப்பு எலும்புக்குள் இருந்தாலும் எளிதாகச் சென்று முழுவதுமாக எடுத்துவிடலாம். குடலை வெளியே கொண்டு வந்து வைப்பதற்கான வாய்ப்பும் லேப்ராஸ்கோபி சிகிச்சை முறையிலும் மிகவும் குறைவு.

கட்டி மற்ற இடங்களுக்கு பரவியிருந்தால் கதிரியக்கம் மற்றும் கீமோதெரபி எனப்படும் ஊசி மருந்துகள் மூலம் கட்டியின் அளவை குறையச் செய்ய முடியும். இப்படி ஒவ்வொரு நிலையிலும் அதற்குத் தகுந்த சிகிச்சை முறைகள் உள்ளன.

### மலக்குடல் புற்றுநோய் வராமல் தடுக்க சில அறிவுரைகள்

நாம் சாப்பிடும் உணவில் நார்ச்சத்து அதிகம் சேர்த்துக்கொள்ளவேண்டும். பழங்கள், கீரைவகைகள், காய்கறிகள் இவற்றில் நார்ச்சத்து அதிகம் இருப்பதோடு விற்றமின் மற்றும் தாதுப்பொருட்களும் நிறைந்திருக்கின்றன. இவற்றை நாம் அன்றாடம் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

கொழுப்புச் சத்து, காரம் குறைவான

டாக்டர் சி.பழனிவேலு
சென்னை

உணவுகளையே எடுத்துக்கொள்வது நல்லது. நாற்பது வயதிற்கு மேல் அனைவரும் குடல் நோய் பரிசோதனை செய்தால் புற்று நோய் பூரண குணப்படுத்தும் நிலையில் கண்டறிந்து சிகிச்சைபெறலாம். எல்லாம் நம் கையில்தான் உள்ளது.

# கோடைக்கேற்ற உணவு வகைகள்!


இப்போது கோடைகாலத்தின் உச்சக் கட்டம் என்பதால் அனைவரும் கடும் வெயிலால் பாதிக்கப்பட்டு வருகிறோம். கோடையின் பாதிப்பால் இலவசமாக சில நோய்களும் வந்துவிடுகின்றன. கோடைக்கேற்ற உணவுவகைகளை சாப்பிட்டால் அந்த நோய் பாதிப்பில் இருந்து தப்பிக்கலாம்.

கோடைக்காலத்தில் நீர்ச்சத்து அதிக அளவில் தேவைப்படும். காய்கறிகளில் நீர்ச்சத்து அதிகம் காணப்படுகிறது. காய்கறிகளை முடிந்தவரை பச்சையாகவோ அல்லது லேசாக வேக வைத்தோ உட்கொண்டால் தான் அதிக அளவிலான நீர்ச்சத்தை நாம் பெறமுடியும். காய்கறிகளைப் போன்று பழங்களிலும் நிறைய நீர்ச்சத்து உள்ளது. காய்கறிகளையும், பழங்களையும் இந்தக் கோடையில் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக உட்கொள்கிறோமோ அந்த அளவுக்கு நல்லது.

### வெள்ளரி


ஆங்கிலத்தில் " வெள்ளரியைப் போல குளிர்ந்தது" என்றொரு சொற்றொடர் உண்டு. அதுவே வெள்ளரி எவ்வளவு குளிர்ச்சியா னது, நீர்ச் சத்து மிக்கது என்பதைக் காட்டிவிடுகிறது.

வியர் வை போன்றவற் றின் மூலம் உடம்பிலிருந்து அதிகமாகத் தண்ணீர் வெளியேறும்போது உடம்பில் தாது உப்புக்களின் சமநிலையைக் காக்க வெள்ளரி உதவுகிறது.



வெள்ளரியின் தோலில் அதிகமாக "ஸ்டீரால்" உள்ளது. இந்த "ஸ்டீரால்" கொழுப்பைக் கட்டுப்படுத்தக் கூடியது. எனவே வெள்ளரியைக் கழுவிவிட்டு தோலைச் சீவாமலே சாப்பிடலாம். காரணம் தோலில் தான் அதிகமாக "ஸ்டீரால்" உள்ளது. வெள்ளரி குறைவான கலோரியை அளிக்கக்கூடியது என்பதால் எவரும் இதை விரும்பிச் சாப்பிடலாம்.

### தக்காளி



அதிக தண்ணீர்ச்சத்து நிறைந்த காய்கறிகளில் ஒன்றான தக்காளி, புற்றுநோய் உள்ளிட்ட பல உடல் நலக் குறைபாடுகளுக்குத் தடை போடக் கூடியது. தக்காளிக்கு அதன் தனிச்சிறப்பான சிவப்பு நிறத்தைத் தரும் "லைக்கோபீன்" என்ற வேதிப்பொருள், வெயில் காலத்தில் நமது சருமம் வெயிலால் பாதிக்கப்படாமல் காக்கிறது. தக்காளியில் " விற்றமின் ஏ" சத்தும் அதிகமாக உள்ளது.

### தர்ப்பூசணி

வெயில் காலத்தில் அதிகமாக விற்பனையாவது தர்ப்பூசணி. இதைத் தர்ப்பூசணி என்பதை விட "தண்ணீர்ப் பூசணி" என்றே கூறலாம். வெயில் வாட்டும் நேரத்தில் சாதாரண தண்ணீருக்குப் பதிலாக, புதிதாகத் துண்டு போடப்பட்ட சாறு நிறைந்த தர்ப்பூசணியை சாப்பிடலாம். தண் ணீர்ச்சத்து நிறைந்த, கலோரி நிறைந்த தர்ப்பூசணி, வெயில் காலத்தைச் சமாளிக்க ஏற்ற ஒன்று.

தர்ப்பூசணி சக்தி வாய்நத் " ஆன்டி ஆக்சிடன்ட்களை" கொண்டுள்ளது. உடம்பில் நச்சுக்களின் தீமையை எதிர்க்கக் கூடியவை இவை. தர்ப்பூசணி நார்ச்சத்தும் செறிந்தது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

காய்கறிகளைக் கொண்டு சூப் தயார் செய்து, அதை குளிரவைத்து உட்கொள்வதும் சிறந்தது என்கிறார்கள் அமெரிக்க டாக்டர்கள். வாழைப்பழம் நிறையச் சாப்பிடுவதும் கோடைகாலத்தில் நல்ல உடல் நலத்தை தரும் என்றும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

கோடை வெயிலில் சிறிது தூரம் நடந்தாலே வியர்த்துக் கொட்டிவிடும். அப்புறம் என்ன... அரிப்புதான்! வெங்காயத்தை உணவில் அதிக அளவில் சேர்த்துக் கொண்டால் வெப்பத்தால் ஏற்படக்கூடிய அரிப்பு வராது. வெங்காயத்தில் உள்ள "குவர்சடின்" என்று வேதிப்பொருள் அதற்கு உதவுகிறது.

மேலே குறிப்பிட்ட பழங்களைத் தவிர பொதுவாகப் பழவகைகள் அனைத்தும் கோடை காலத்துக்கு ஏற்ற நன்மை தருபவை



தான். எனவே எவ்வளவு பழங்கள் முடியுமோ, அவ்வளவு பழங்களை அன்றாடம் சேர்த்துக்கொள்ளுங்கள். இளநீர், மோர், எலுமிச்சைச் சாறு போன்றவையும் நன்மை பயப்பவைதான். உங்களுக்கு விருப்பமா னதை அன்றாடம் சாப்பிட்டு வெயில் காலத்தில் ' உங்கள் உடல் நலத்தைக் காத்துக் கொள்ளலாம்.

Health Care மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

# தண்ணீர் குடியுங்கள்



என்ன தான் உடற்பயிற்சி செய்தாலும் ரொனிக் சாப்பிட்டாலும்உடல் எடை ஓரளவ தான் குறையும்.ஆனால் தொடர்ந்து தண்ணீர் குடித்து வாருங்கள் ஒரு மாதத்திலேயே மாற்றம் தெரிந்து விடும்.

உடலில் கலோரியைக் கட்டுப்படுத்த மருந்து தேவையல்ல.தண்ணீர் தான் முக்கிய தேவை.தண்ணீர் சாப்பிட்டால் உடலில் வயிற்றில் இருந்து ஆரம்பித்து குடல் சிறுநீரகம் என்று எல்லா இடத்தையும் சுத்தப்படுத்தி எலும்பு, தசைகளையும் எந்தப் பாதிப்பும் இல் லாமல் சீராக்கிச் சென்று கடைசியில் வெளி யேறி விடுகிறது. இப்படிச் செய்வதால் தான் சிறுநீரக பிரச்சினை, குடல் பிரச்சினை என்று எதுவும் வராது.

### நாம் எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும்? இதுதான் பலரின் கேள்வி

◆ ஒரு நாளைக்கு எட்டு முதல் பத்து டம்ளர் வரை தண்ணீர் குடிக்கலாம். அப்பிள், ஓரஞ்சு என்று பழங்களாகவும் சாப்பிட லாம். அவற்றில் 70 சதவீதம் வரை தண்ணீர் சத்து தான் உள்ளது. தினமும் ஏதாவது ஒருசமயம் பழங்க-ளாக சாப்பிட்டால் நல்லது.


◆ பொதுவாக நம் உடல் எடையில் பாதி அளவுக்கு தண்ணீர் குடிக்க வேண்டும். அதாவது உதாரணமாக 120 பவுண்ட் எடை இருப்பதாக வைத்தால் பாதி அளவு 60 அவுன்ஸ் தண்ணீர் குடிக்க வேண்டும்.

◆ ஒரு பக்கம் தண்ணீர் குடித்து விட்டு இன்னொரு பக்கம் கோப்பி குடித்தால் பலனே இல்லை: குடித்த தண்ணீரை , வற்ற வைத்து விடும் காப்பியில் உள்ள காபின்.

◆ அல்கஹோலும் அப்படித்தான். தண்ணீர் வேண்டியஅளவு குடித்து விட்டு மது பழக்கம் இன்னொரு பக்கம் இருந்தால் நாக்கு வறண்டு தான் போகும்.உடலில் தண்ணீர் ஏறவே ஏறாது.

◆ தண்ணீர் சாப்பிடுகிறேன் என்று ஒரே மொடக்கில் அடிக்கடி கண்டபடி குடம் குடமாக குடிப்பதும் தவறு.

◆ வெறும் தண்ணீர் குடிக்கப் பிடிக்காவிட்டால் அதில் தேயிலை பையை நனைத்தோ எலுமிச்சைசாறு பிழிந்தோ குடிக்கலாம்.
















வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட மகளிர் அபிவிருத்தி நிலைய தையல், மனையியல் கண்காட்சியும் விற்பனையும் நேற்று யாழ். இந்துக்கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜெ.ஜெ.பெலிசியன் மங்கல விளக்கேற்றுவதனையும், கண்காட்சியை நாடாவெட்டி திறந்து வைப்பதனையும், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் ,யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி பத்மினி சிவலிங்கம், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எழிலரசி அன்ரன் லோகநாயகம் ஆகியோர் உரையாற்றுவதையும், பொதுமக்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும், கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கப்படுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-டுசாந்தன்)

## வவுனியா ஆண்டியாப் புளியங்குளம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக்கொலை

(கொழும்பு)

வவுனியா, செட்டிக்குளம் பொலிஸ் பிரிவிலுள்ள ஆண்டியாப் புளியங் குளம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினமிரவு கொலை செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் கூரிய ஆயுதமொன்றினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது.

46 வயதுடைய முஹம்மத் முஸ்தபா தாரூக் என்பவரே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டவரா வார். வவுனியா மாவட்ட நீதவானின் உத்தரவின் பேரில், பிரேத பரிசோதனைக்காக தற்போது சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது. (2-6)

## யாழ்.சீமெந்து தொழிற்சாலை மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளது

### யாழ். கட்டளைத் தளபதி தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் அதற்கான மதிப்பீட்டு அறிக்கை கோரப் பட்டுள்ளதாக யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹதுருசிங்க தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கும் போது, யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் துறையை ஊக்கு விக்கும் வகையில்பல்வேறு தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கமைய காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மீள ஆரம் பிக்கப்படவுள்ள துடன் பனை, வலை பின்னல், படகு கட்டும் தொழிற்சாலை, கடல்சார் உணவு மற்றும் கைத்தொழில் பேட்டை என்பன ஆரம்பிக்கப் படவுள்ளன.

சீமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதற்கான தென் பகுதியைப் போன்று வடபகுதிக்கும் தேவையான சகல வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுத்துள்ள துடன் அதனை மேலும் விஸ்தரிக் கும் வேலைத் திட்டங்களையும் ஆரம்பித்துள்ளது.

மேலும் யாழ். மக்களின் ஜீவனோ பாயத்தை மேம்படுத்தவும் நடவடிக் கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்களு க்குத் தேவையான சகல உட்கட்ட மைப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன் குறுகிய காலத் தில் யாழ்ப்பாணத்தில் விவசாயம் மற்றும் மீன்பிடித்துறை பாரிய அள வில் அபிவிருத்தி கண்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (2-6)'


## கேள்வி அறிவித்தல்

### இலங்கை மின்சார சபை யாழ்ப்பாணம் (வடமாகாணம்)

### கேள்வி இல: NP/DGM/2010/17

சுன்னாகம் மத்திய மின் நிலைய கட்டடத்தை புதுப்பித்தல் (மீள்வர்ணம் பூசுதல்)

RENOVATION (REPAINTING) OF CENTRAL POWER STATION BUILDING AT CHUNNAKAM

மேல் குறிப்பிடப்பட்ட வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி (Tender)2010.04.30 ஆம் திகதி காலை 10.00 மணிவரை இலங்கை மின்சாரசபை (வடமாகாணம்) மாகாண பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வியாளர்கள், கேள்விப்பத்திரங்களை ரூபா 300.00 (முந்நூறு )க்கான கொடுத்தல் பத்திரத்தினை எமது அலுவலகத்தில் பெற்று செலுத்துவதன் மூலம் அல்லது பொதுமுகாமையாளர், இலங்கை மின்சாரச்பை, கொழும்பு என்ற பெயரில் பெறப்பட்ட வங்கிக் கட்டளையாகவோ சமர்ப்பித்து, இல: 500, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள பிரதிப் பொது முகாமையாளர், (வடமாகாணம்) அலுவலகத்தில் 29.04.2010 ஆம் திகதி வரை வேலை நாட்களில் காலை 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 2010.04.30 மாலை 2.00 மணிக்கு பிரதிப் பொதுமுகாமையாளர் (வடக்கு), இலங்கை மின்சாரசபை, இல:500, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். அலுவலகத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்வியாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்டவர் சமுகமளிக்கலாம்.

கேள்வியாளர்கள் இலங்கை மின்சாரசபையிலிருந்து பெறப்பட்ட கேள்விப் பத்திரங்களில் மாத்திரம் இணைப்பிரதிகளில் (Duplicate) பூர்த்திசெய்து ,கடித உறையிலிட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில் "சுன்னாகம் மத்திய மின்நிலைய கட்டடத்தை புதுப்பித்தல் (மீள்வர்ணம் பூசுதல்) வேலைகளை நிறைவேற்றுவதற்கான கேள்வி'' எனக் குறிப்பிட்டு மேற்குறித்த முகவரிக்கு 30.04.2010 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது இவ்வலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். இவ்வறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட விலாசத்தில் உள்ள பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு), அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

மாகாண பெறுகைக் குழு (வடமாகாணம்),
பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
இல:500,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர்,
மாகாண பெறுகைக் குழு,
(வடமாகாணம்).

தொலைபேசி இல: 021 222 2496
021 222 3233
021 224 0277

தொலைநகல் இல: 021 222 2497

'சூழல் மற்றும் அபிவிருத்தி
வேலைகளிற்கு கை கொடுக்கும்"
இலங்கை மின்சாரசபை

(C-126)


## ஆறு ஆண்டுகளின் பின் குடாநாட்டு வெப்பநிலை தற்போது அதிகரிப்பு

### திருநெல்வேலி வளிமண்டல ஆராய்ச்சி திணைக்களம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் குடாநாட்டின் வெப்பநிலை தற்போது அதிகரித்துள்ளதாக திருநெல்வேலி வளிமண்டலவியல் ஆராய்ச்சி நிலையம் தெரி வித்துள்ளது.

நிலைய பணிப்பாளர் கே. புஸ்பநாதன் தெரிவிக்கையில்,

கடந்த 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் $36^{\circ}C$ வெப்பநிலை காணப்பட்டதுடன் அதன் பின்னர் இவ்வாண்டு ஏப்ரல் மாதமே வெப்பநிலை அதிகரித்துக் காணப் படுவதாகவும் இவ் வெப்பநிலை தொடர்ந்து இரண்டு கிழமை வரை அதிகரித்துக் காணப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் $34.7^{\circ}C$ வெப்ப நிலையுடன் 204 .4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி கிடைக்கப் பெற்றதாகவும் இந்நிலையில் இம்மாதம் காலை யில் அதிக வெப்பமான பருவ நிலையும் மாலையில் ஆங்காங்கே பரவலாக மழை வீழ்ச்சி கிடைக்கக் கூடிய சந்தர்ப்பம் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இக் கால நிலையின் போது பயிரிடப்படும் பயிர்ச் செய்கைகளின் விளைச்சல்கள் குறைவடைவதுடன் சிறிய நோய்கள் ஏற் படக் கூடும் எனவும் அவர் மேலும் தெரிவித் தார். (6-7)

பல சமயங்களில் முப்பத்திரண்டு பற்க ளும் சேர்ந்து நாக்கை அடக்க முடிய தில்லை. -அங்கேரி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஆளும் கட்சி உறுப்பினர்கள் நாட்டு மக்களுக்கு உரிய முறையில் கடமையாற்ற வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

ஆளும் கட்சி உறுப்பினர்கள் நாட்டு மக்களுக்கு உரிய முறையில் தமது கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மக்கள் நாட்டுக்காக தமது கடமையை உரிய முறையில் நிறைவேற்றியுள்ளதாகவும் பதிலுக்கு நாங்களும் எமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.


நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் நடைபெற்ற முதலாவது சந்திப்பின் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறும்போது, நாட்டின் அபிவிருத்திப்பணிக்கு அனைவரும் தயாராக வேண்டும்.

அரசாங்கம் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் சீர்குலைக்கக் கூடாது. சிரேஸ்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் வழிகாட்டல்களின் அடிப்படையில் புதியவர்கள் தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் என்றார். (2-6)

# ஆறு மாத விசாவை வழங்கி விட்டு எனது தாயாரை திருப்பியனுப்பியுள்ளனர்

## வேலுப்பிள்ளை மனோகரன் கவலை



(கொழும்பு)

புலிகளின் தலைவர் பிரபாகரனின் அண்ணன் வேலுப் பிள்ளை மனோகரன் நேற்று முன்தினம் டென்மார்க்கில் இடம்பெற்ற விழாவொன்றில் தலைமையுரையை ஆற்றிய போது, தனது தாயார் இந்தியாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட நிகழ்வால் தான். மிகுந்த மனவருத்தமடைந்திருப்பதாக தெரிவித்தார்.

மேலும் நடைபெறும் இந்த விழாவிற்கு தலைமைதாங்க வரமுடியாதளவிற்கு மனக்கவலையை தாயார் நாடு கடத்தப்பட்ட அந்தச் சம்பவம் கொடுத்ததாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கும் போது,

இந்தியா செல்வதற்கு ஆறு மாதங்கள் விசாவை மலேசியாவில் உள்ள இந்தியத் தூதரகம் வழங்கியது. அத்தோடு புறப்பட்ட என் தாயார் விமானத்தில் இருந்து இறங்க முடியாதவாறு தடுத்து வைக்கப்பட்டு பின் வந்த விமானத்திலேயே மலேசியா திருப்பி அனுப்பப்பட்டு விட்டதையும் அறிந்து பெரும் மனவருத்தமடைந்தேன்.

எனது தாயார் ஏற்கனவே நீண்ட நாட்கள் இந்தியாவில் இருந்தவர். தற்போது அவர் மருத்துவ சிகிச்சைகளுக்காகவே அங்கு செல்ல இருந்தார். இராணுவ முகாமில் சிறையிருந்து நினைவுமறதி உண்டாகியுள்ள அவருக்கு இப்போது ஞாபகசக்தி மிகவும் குன்றியுள்ளது.

சுகயீனமான ஒருவர் என்று விசா எடுத்துவந்த ஒருவரின் நம்பிக்கை இப்படியாகக் குலைக்கப்பட்டுள்ளமை நோயாளி என்ற கோணத்தில் மிகவும் கவலைக்குரிய செயல். அதே வேளை தற்போது அவருக்கு ஒரு மாதகால விசா மலேசியாவில் வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு மாத காலம் மலேசியாவில் நிற்க முடியும் என்றும் கூறினார். (2-6)

# வவுனியாவில் திடீர்மழை

## முகாம்வாசிகளும், மீள்குடியேறியோரும் பெரும் சிரமத்துக்குள்ளானார்கள்

(கொழும்பு)

தற்போது நாட்டில் பரவலாக நிலவும் வரட்சி நிலையோடு வவுனியாவில் திடீர் மழை பெய்ததையடுத்து இடம்பெயர்ந்து முகாம்களில் வசிப்பவர்களும் குறிப்பாக மீளக்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காற்றுடன் கூடிய கடும் மழை சனிக்கிழமை இரவு மெனிக்பாம் முகாம் பகுதியில் பெய்துள்ளதாக அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மழை காரணமாக நாட்பட்டு பழுதடைந்துள்ள கூரை விரிப்புகளுக்கிடையில் மழைநீர் கொட்டில்களின் உள்ளே புகுந்ததனால் கொட்டில்களில் இருக்கவோ படுக்கவோ முடியாமல் குழந்தைகள், பெரியவர்களுடன் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

கடும் வரட்சி காரணமாக பகல் வேளைகளில் கூடாரங்களில் இருக்கமுடியாமல் இருப்பதுடன் மழையில்லாத போது இரவு வேளையில் கூடாரங்களில் நித்திரை கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள கிராமங்களில் வீடுகள் இல்லாமல் தகரக் கொட்டில்களிலும் கூடாரங்களிலும் வசிக்கும் மக்கள் இந்தத் திடீர் மழை காரணமாக பெரும் பாதிப்புக்கு உள்ளாகியதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிலத்திற்கு சீமெந்து இல்லமால் கூரை விரிப்புகள் விரிக்கப்பட்டிருந்த போதிலும் மழைநீர் கூடாரங்களுக்குள் புகுவதால் இருக்கவோ, படுக்கவோ, இருக்கின்ற ஒன்றிரண்டு பொருட்களை நீரில் நனையாமல் பாதுகாப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளதாக மீளக்குடியமர்ந்த குடும்பங்களைச் சேர்ந்தோர் தெரிவிக்கின்றனர். (2-6)

# சென்னை மெரீனா கடற்கரையில் இலங்கையர் ஒருவர் கைதானார்

## பொலிஸார் தீவிர விசாரணை

(கொழும்பு)

சென்னை நகர் முழுவதும் கடந்த சனிக்கிழமை நடந்த தீவிர சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கைகளில் நானூறுக்கும் மேற்பட்டோர் சிக்கினர். இவர்களில் ஒருவர் மெரீனா கடற்கரையில் வைத்து பிடிபட்டார். இவரது பெயர் முகம்மது அன்சாரி. இலங்கையைச் சேர்ந்தவர் ஆவார்.

மெரீனா கடற்கரையில் படகுகளுக்கு மத்தியில் பதுங்கியிருந்த நிலையில் அவரைப் பிடித்த பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அவருக்கு தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்பு உள்ளதா என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது. சுற்றுலாவாக தமிழ்நாடு வந்ததாகவும் அப்போது கடவுச்சீட்டு தொலைந்து போய் விட்டதாகவும் அன்சாரி கூறியுள்ளார்.

ஆனாலும் வாக்குமூலம் குழப்பமாக இருப்பதால் அவரைப் பொலிஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். (2-6)

# எல்லாவல மேதானந்த தேரருக்கு ஓர் அன்பு மடல்

தருவதை வேண்டிக் கொண்டு மௌனமாக இருங்கள் என்று தமிழர்களுக்கு அறிவுரை கூறிய ஜாதிக ஹெல உறுமயவின் பௌத்த பிக்கு எல்லாவல மேதானந்த தேரர் மீண்டும் ஓர் இனவாதத் தீயை கக்கிக் கரியாக்கி உள்ளார்.

தருவதை வேண்டிக் கொண்டு இருந்து விட வேண்டும் என்பதை பௌத்த பிக்கு எல்லாவல மேதானந்த தேரர் சொல்லவும் அதை நாங்கள் கேட்கவும் விதியாகி விட்டது.

என்ன செய்வது எல்லாம் கால அசைவில் நடக்கும் நாடகம். அந்த நாடகத்தில் நடிப்பவர்கள், கதை வசனம் எழுதுபவர்கள் காலத்திற்கு காலம் மாறுகின்றனர். அவர்களை இயற்கை மாற்றுகின்றது.

இப்போது மேதானந்த தேரரின் பக்கமாக காற்று வீசுகின்றது. அவர் கண்மண் தெரியாமல் கதைக்கிறார்.

தருவதை வேண்டிக் கொண்டு இருங்கள் என்று தமிழர்களுக்கு அதட்டி கூறும் சந்தர்ப்பம் அவருக்கு வாய்த்து விட்டது. எதுவாயினும் தேரர் ஓர் உண்மைத் தத்துவத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும்; வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும் என்பதே அந்தத் தத்துவம்.

இந்தத் தத்துவத்தை புரிந்து கொள்ளும் மனப்பக்குவம் அவரிடம் இல்லையாயின் அது அவரை பௌத்த தேரர் ஆக்கிய பிரிவேனாவின் தவறே அன்றி வேறு யாருடையதுமல்ல.

மாறாக மேற்கூறப்பட்ட தத்துவதை புரிந்து கொள்ளும் மனநிலை அவரிடம் இருக்குமாயின் தருவதை வேண்டிக் கொண்டு இருங்கள் என அவர் கூறியதை அவருக்கு திருப்பிக் கூறுவதற்கு அதிக காலம் ஆகாது என்பதை அவர் உணர்ந்து கொள்வார்.

உலகம் மாறுகின்றது. இயற்கை மாற்றுகின்றது. நேற்றுக் கோடீஸ்வரராக இருந்தவர் இன்று பரம ஏழை. இது நாள்வரை ஏழையாக இருந்தவர் அதிரடியான கோடீஸ்வரர்.

நேற்றுவரை இராணுவத் தளபதியாக இருந்து வன்னி யுத்தம் நடத்தியவர் இன்று சிறையில். இரண்டு தடவைகள் ஆட்சியில் இருந்தவர் இப்போது பேசாமடந்தை

எப்படி இருக்கிறது இயற்கையின், இறைவனின் திருவிளையாட்டு.

இந்தத் திருவிளையாட்டை போதிமாதவனின் போதனையைக் கற்றுக் கொண்ட பௌத்த தேரரால் புரிந்து கொள்ள முடியவில்லை எனின் சாதாரண மக்களால் எப்படி புரிந்து கொள்ள முடியும்?

பௌத்த சிங்கள நாடு என்று கோசம் போட்டதால் இந்த மண்ணில் உருண்ட தலைகள் எத்தனை? உடைந்து மண்மேடாகிப் போன கட்டிடங்கள் எத்தனை?

இன்றுவரை கண்ணீர்விடும் குடும்பங்கள் எத்தனை? இவற்றை எல்லாம் மறந்து மேதானந்த தேரர் இனவாதத் தீயை கக்கி சாதிக்கப்போவதுதான் என்ன?

தருவதை வேண்டிக் கொண்டு மௌனமாக இருக்க வேண்டும் எனக் கூறிய தேரர் இப்போது புதியதொரு சோடனை வரலாற்றில் முடிந்து விடுகிறார்.

அதாவது வடக்குக் கிழக்கு தமிழ் மக்கள் விகாரைகளையே வழிபட்டனர் என்பதே அவரின் புனைவு.

இத்தகைய புனைவுகளால் தமிழ் மக்கள் அதிர்ந்து விட மாட்டார்கள். அவர்கள் தங்கள் தொன்மையின் பூர்வீக சிறப்புமிக்க சைவத்தில் ஊறித் திளைத்தவர்கள்.

கந்தக் கடவுளை தமிழ்க் கடவுளாக தரிசித்தவர்கள். அவர்கள் ஒருபோதும் தேரரின் தீ நாவில் எழுந்த மதவாதப் பேயைக் கண்டு அஞ்சமாட்டார்கள்.

ஆனாலும் மேதானந்த தேரருக்கு ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகின்றோம். வடக்குக்கிழக்கு தமிழ் மக்கள் விகாரைகளையே வழிபட்டார்கள் என்று கூறும் நீங்கள்,

வடக்குக் கிழக்குக்கு வந்து செல்லும் பௌத்த [illegible] மக்கள் எங்கே சென்று வழிபடுகின்றார்கள் என்பதை அவர்களிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

நல்லூர்க் கந்தனை, நயினை நாகபூசணியை, திருகோணமலைச் சிவனை பௌத்த சிங்கள மக்கள் பௌவியமாக வழிபடும் சிறப்பை, விருப்பை நீங்கள் நேரில் பார்த்தால் யார் எதை வழிபட்டார்கள் என்பதை புரிந்து கொள்வீர்கள்.

யதார்த்தம் ஒன்றாக இருக்க வேறொன்றைப் புகுத்தி வஞ்சனை செய்வது புத்தபிரானை இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்யும்.

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## பல்சுவை



ஆடம்பர வாழ்க்கையின் மடியிலே தாலாட்டப்பட்டு வளர்ந்தவன், ரோஜா மலர்ப்படுக்கையில் படுத்திருப்பவன், எப்போதுமே ஒரு துளிக் கண்ணீர் சிந்தாதவன் எவனோ, அவன் என்றைக்காகிலும் சான்றோனாக ஆகியிருக்கிறானா? இத்தகையவன் என்றைக்காகிலும் தனக்குள் இருக்கும் பிரம்மத்தை மலரச் செய்திருக்கிறானா?

அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். ஏனென்றால் அறிவுக்கு, பகுத்தறிவு என்னும் ஒரே ஒரு நிலை மட்டும்தான் உண்டு. அந்த ஒரு நிலைக்குள் இருந்தபடியே அறிவு வேலை செய்கிறது. தனக்கு உரிய அந்த எல்லையைக் கடந்து அறிவு செல்லமுடியாது.

## தமிழகத்தை ஆள வாய்ப்பளியுங்கள்

### டாக்டர் இராமதாஸ்

நான் எந்த ஒரு பதவிக்கும் ஆசைப்பட மாட்டேன்.பல்வேறு நெருக்கடியால் தான் எனது மகன் அன்புமணியை மத்திய மந்திரி யாக்கினேன். சிதறிக்கிடக்கும் இளைஞர்களை மீட்டு என்னிடம் கொண்டு வாருங்கள். இவ்வாறு விருத்தாசலத்தில் இடம்பெற்ற கூட்ட மொன்றில் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் இராமதாஸ் தெரிவித்தார்.

தமிழகத்தை ஆள பா.ம.க விற்கு ஒரு முறை வாய்ப்புக் கொடுங் கள். அதற்குப் பிறகு நீங்களே கட்சியைப்பற்றி தெரிந்து கொள்வீர்கள். தமிழகத்தை ஆள பா.ம.க தகுதி அற்ற கட்சி என்று ஒரு கட்சியோ, நிறுவனமோ இயக்கமோ என்னிடம் சொன் னால் பா.ம.க. கட்சியை களைக்க நான் தயா ராக இருக்கிறேன். தமிழகத்தை ஆள எல்லாத் தகுதிகளையும் கொண்ட ஒரு கட்சி எமது கட்சி தான் என்று மேலும் தெரிவித்தார். (2)

# பார்வதியம்மாளை திருப்பியனுப்பியதில் தமிழக அரசுக்கு தொடர்பில்லை

## கருணாநிதி தெரிவிப்பு


(சென்னை)

சிகிச்சை பெறவந்த பார்வதியம்மாள் சென்னை விமான நிலையத்திலிருந்து திருப்பியனுப்பப்பட்ட பிரச்சினையில் தமிழக அரசுக்குத் தொடர்பில்லை என்று தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

இது தொடர்பாக தமிழக சட்டசபையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது அவர் இதை தெரிவித்தார். கடந்த 16 ஆம் திகதி இரவு தனது பக்கவாத நோய்க்கு சிகிச்சை பெற மலேசியாவிலிருந்து விமானத்தில் சென்னை வந்த பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாளை சென்னை விமான நிலைய குடியுரிமை அதிகாரிகள் விமானத்திலிருந்து இறங்க அனுமதி மறுத்து மீண்டும் அதேவிமானத்தில் மலேசியாவிற்கே திருப்பியனுப்பினார்.

இதற்கு தமிழக அரசியல் கட்சியினர், தமிழ் அமைப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். மனித நேயமற்ற இந்த செயல் கண்டிக்கத்தக்கது என்று ராமதாஸ் , திருமாவளவன், கி.வீரமணி, பழ.நெடுமாறன், த.பாண்டியன், பொன்.ராதாகிருஷ்ணன், டாக்டர் கிருஷ்ணசாமி ஆகியோர் கருத்துத் தெரிவித்திருந்தனர். இந்நிலையில் நேற்று சட்டமன்ற கூட்டத் தொடர் தொடங்கியதும் பார்வதியம்மாள் திருப்பியனுப்பப்பட்டது குறித்து எதிர்க்கட்சிகள் சார்பில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இதன் மீது அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கருத்துத் தெரிவித்தனர். ம.தி.மு.க., பா.ம.க., விடுதலைச் சிறுத்தை கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் உறுப்பினர்கள் பார்வதியம்மாள் திருப்பியனுப்பப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்ததோடு, அவரை மீண்டும் சென்னைக்கு அழைத்துவந்து சிகிச்சை பெற அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.



உறுப்பினர் உரைகளுக்குப் பின் பதில் அளித்துபேசிய முதல்வர் கருணாநிதி...

பார்வதியம்மாள் சிகிச்சை பெற சென்னை வருவது குறித்து தமிழக அரசுக்கு தெரிவிக்கப்படவில்லை.

அவர் சென்னை வந்தபோது சிகிச்சை பெற அனுமதிக்காமல் திருப்பியனுப்பிய சம்பவத்துக்கும், தமிழக அரசுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

அவர் சென்னையில் சிகிச்சை பெற விரும்பினால் அது குறித்து தமிழக அரசு பரிசீலனை செய்யும், சென்னையில் சிகிச்சை பெற அனுமதிக்கக் கோரி மத்திய அரசுக்கு பரிந்துரைப்போம் என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்தார். (2-6)

## பிள்ளைகள் விரட்டியதால் 15 ஆண்டுகள் சுடுகாட்டில் வசிக்கும் தம்பதிகள்

(நகரி)

ஆந்திர மாநிலம் அனந்தபுரம் மாவட்டம் சின்னகிளி கிராமத்தை சேர்ந்தவர் குலாயப்பா (78). இவரது மனைவி ஒபுலம்மா(73). இவர்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். அவர்களுக்கு திருமணமாகி குழந்தைகள் உள்ளன.

இருவரும் தங்கள் பெற்றோரிடம் இருந்து நிலம், வீட்டை எழுதி வாங்கி பதினைந்து ஆண் டுகளுக்கு முன்பு வீட்டை விட்டு விரட்டி விட்டனர். அனாதையான அவர்கள் கடப்பா மாவட்டம் காமனூரில் உள்ள சுடுகாட்டுக்குச் சென்றனர். அங்குள்ள சமாதி ஒன்றில் தங்கினர். அங் கேயே சமையல் செய்து சாப்பிட்டு வருகின்றனர். அவர்களுக்கு நிவாரண அட்டை, வாக்குரிமை எதுவும் கிடையாது.

குலாயப்பா கூறும்போது, இரண்டு மகன்களையும் கஷ்டப்பட்டு படிக்க வைத்தேன். அவர்களுக்குத் திருமணமானதும் எங்களை மறந்து விட்டார்கள். அவர்களுக்கு பெற்றோர் பாசத்தை விட பணம் தான் பெரிதாக தெரிகிறது. அவர்களுக்கு காலம் தான் பதில் சொல்லும் என்றார். (6)

## ஐஸ்லாந்து எரிமலை சீற்றத்தால் பெரும்பாலான விமானசேவைகள் ரத்து

### விமான நிறுவனங்களுக்கு 100 கோடி டொலர் நஷ்டம்

(மெல்பேர்ன்)

ஐஸ்லாந்தின் தெற்குப் பகுதியில் உள்ள எரிமலை சீற்றத்தால் வெளி யேறும் சாம்பல் காரணமாக விமான சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள் ளன. இதனால் விமான நிறுவனங் களுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் 100 கோடி டொலரை (இந்திய மதிப்பில் ரூ.4277 கோழி) தாண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எரிமலை சாம்பல் வெளியேற்றம் காரணமாக பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் 12க்கும் அதிகமான விமான நிலையங்கள் முற்றிலுமாக மூடப்பட்டுள் ளன. மேலும் மூன்று நாட்களுக்கு இந் நிலை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவுக்கு இயக்கப்படும் பெரும்பாலான விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. இதனால் விமான நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள 100 கோடி டொலரைத் தாண்டும் என இத்துறையைச் சார்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

விமான சேவை ரத்துச் செய்யப்பட்டதால் சுமார் 60 இலட்சம் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் ஐரோப்பிய நாடுகளில் உள்ள விமான நிலையங்களில் பரிதவிக்கின்றனர்.

டெல்டா ஏர்லைன்ஸ் இன்கார்ப்பரேஷன், பிரிட்டிஷ் ஏர்வேஸ்,குவாண்டாஸ் ஏர்வேஸ் ஆகிய நிறுவனங்கள் விமான சேவையை ரத்துச் செய்த நிறுவனங்களில் குறிப்பிடத்தக்கவை.

ஐஸ்லாந்தில் உள்ள எரிமலையிலிருந்து வெளியாகும் சாம்பல் 5,500 அடி உயரம் வரை மேலே எழும்பியதால் வான் வெளியில் இது பரவியுள்ளது. இதனால் விமானங்கள் இப்பகுதியில் பறக்க முடியாத சூழல் உருவாகியுள்ளது.

ஜேர்மனியில் பிராங்பர்ட் உட்பட 7 விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. குவாண்டாஸ் நிறுவனம் தனது 4 விமான சேவைகளை ரத்துச் செய்துள்ளது. இதேபோல சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமான நிறுவனம் 8 விமானங்களை ரத்துச்செய்துள்ளது. ஏர் சீனா லிமிடெட், நிப்பான் ஏர்வேஸ் நிறுவனம் உள்ளிட்டவையும் சேவையை ரத்துச் செய்துள்ளன. (6)



ஐஸ்லாந்தில் உள்ள எரிமலை வெடித்து சிதறியதால், பல்வேறு நாடுகள் ஐரோப்பிய நாடுகளுக்கு விமானசேவையை நிறுத்தியுள்ளன. ஜேர்மனியும் விமான சேவையை நிறுத்தியுள்ளதால் ஏராளமான பயணிகள் விமான நிலையத்தில் பரிதவித்தனர்.

### சீன பூகம்பத்தில்

## பலியானோர் எண்ணிக்கை ஆயிரத்து 500ஐ தாண்டியது

(பீஜிங்)

சீனாவின் . திபெத் பீட பூமியில் ஏற்பட்ட பூகம்ப சேதங்களை அதிபர் ஹுயு ஜின்டாவோ நேற்று முன்தினம் பார்வையிட்டார். சீனாவின் திபெத் பீடபூமியில் அமைந்துள்ள குங்ஹாய் மாகாணத்தின், யூஷு மாவட்டத்தில் கடந்த வாரம் 7.1 ரிக்டர் அளவுக்கு பூகம்பம் ஏற்பட்டது.



இதனால் ஏராளமான கட்டடங்கள் தரைமட்டமாயின. இடிபாடுகளில் சிக்கி ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பலியாயினர். 10ஆயிரம் பேர் காயமடைந்தனர். பூகம்பம் பாதித்த ஜீகு என்ற நகரில் 85 சதவீத வீடுகள் தரைமட்டமாகிவிட்டன. இந்தப் பகுதியில் 65 வயது நபரை மீட்புக் குழுவினர் 100 மணி நேரத்திற்கு பிறகு மீட்டனர்.

இதற்கிடையே பிரேசில் பயணம் மேற்கொண்ட சீன அதிபர் ஹு ஜின்டாவோ, பூகம்ப பகுதிகளை பார்வையிடுவதற்காக அவசரமாக தாயகம் திரும்பினார். நேற்று முன்தினம் ஜீகு பகுதியில் பூகம்ப பகுதிகளை பார்வையிட்டார். செங்குத்தான மலைப்பகுதியில் 13 ஆயிரம் அடி உயரத்தில் நடந்துள்ள இந்தப் பூகம்பத்தை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இரவு நேரத்தில் பூஜ்ய டிகிரிக்கு குறைவான வெப்ப நிலை காணப்படுகிறது. கடும் சூறைகாற்றும் சேர்ந்தும் வீசுவதால் மீட்புப் பணி சிரமமாக உள்ளது என மீட்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதுவரை பூகம்பத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 500 ஆக உயர்ந்துள்ளது. பூகம்பத்தில் பலியானவர்களின் உடல்களை புத்த மதத்துறவிகள், சில சடங்குகளை செய்து வெட்ட வெளியில் வரிசையாக கிடத்தினார்கள்.இவர்களது மத சம்பிரதாயப்படி பிணங்களை கழுகுகள் தின்றுவிடும் என்பதால் புதைப்பதில்லையாம். (2-6)

## வாழ்க்கையில் திருப்தி இருந்தால் தான் பணியில் திருப்தி காணமுடியும்

### ஆய்வில் தகவல்

(வோஷிங்டன்)

வீட்டில் மனைவியுடன் சண்டை போட்டால் அன்று அலுவலகத்தில் வேலை ஓடாதல்லவா?ஏன்? நம் வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் திருப்தி நமது வேலையிலும் எதிரொலிக்கிறது என்று காரணம் கூறுகிறது சமீபத்தில் வெளிவந்த ஓர் ஆய்வில்,

ரைட் ஸ்டேட் பல்கலையின் உளவியல் பேராசிரியர் நாதன் பவுலிங் என்பவர், 1967 தொடங்கி 2008 வரை நடந்த 223 ஆய்வுகளைத் தொகுத்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வந்துள்ளார்.அந்த ஆய்வில் வேலையில் திருப்தி இருப்பதால் வாழ்க்கையில் திருப்தி இருக்கிறதா? வாழ்க்கையில் திருப்தி இருப்பதால் வேலை திருப்தி அளிக்கிறதா? என்பது தான் முக்கிய நோக்கமாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வேலையில் திருப்தி, மேற்பார்வை, உடன் பணியாற்றுவோர், சம்பளம், பதவியுயர்வு, மனமகிழ்ச்சி, நல்வாழ்வு அனைத்து வகையிலும் வேலையில் திருப்தி ஆகியவையும் இவ்வாய்வில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. முடிவில் வாழ்வின் திருப்திக்கும், வேலையில் திருப்திக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதாக முடிவுகள் தெரிவித்தன.

வேலையில் ஏற்படும் திருப்தி வாழ்வில் எதிரொலிப்பது குறைவாகத் தான் இருக்கிறது. எப்போதும் திருப்தி இல்லாத மன நிலையுடன் இருப்பவர்கள், தங்கள் வேலை மூலம் திருப்தியைத்தேடிக்கொள்ளலாம் என்று எதிர்பார்ப்பது, ஏமாற்றத்தையே தருகிறது.

மேலும் அதிக வேலைப்பளுவால் படபடப்பு அடைவோரின் உடல் எடல் அதிகரிக்கிறது என்றும் இந்த ஆய்வு தெரிவிக்கிறது. (2-6)

# தற்போதைய பிரதமரின் பெயரில் ஒரு பகுதியை கொண்ட ஒருவரே அடுத்த பிரதமர்

## ஜோதிடருடன் ஒரு சுவாரிஸ்யமான உரையாடல்


நிமால் சிறிபால டி சில்வா


மைத்திரிபால சிறிசேன


எஸ்.பி.திஸநாயக்கா


ரி.எம்.ஜயரத்ன

அந்தச் சோதிடர் நடைபெறும் விடயங்களை முன்கூட்டியே சொல்வதில் புகழ் பெற்றிருந்தார். அதுவும் கடந்த தேர்தல் குறித்து அவர் கூறிய விடயங்கள் மிகத்துல்லியமாக இருந்ததாகக் கூறுவர்.

இதன் காரணமாக அவர் இப்போது கடும் பிஸியாகி விட்டார். ஏராளமானவர்கள் அவரிடம் எதிர்காலம் பற்றி அறிய வந்த வண்ணமிருந்தனர்.

அடுத்து பிரதமர் யார் என்று அறிவதற்கு பிரதமர் பதவியைக் குறி வைத்திருக்கும் பலரும் இப்போது அவரிடம் வரத் தொடங்கியிருந்தனர்.

**நிமால் சிறிபால டி சில்வா**

அவர்களில் முதலாவதாக வந்தவர் நிமால் சிறிபால டி சில்வா. உங்களுக்கே அந்துப் பதவி கிடைக்க வேண்டும் என்று ஏன் நினைக்கிறீர்கள் சோதிடர், நிமால் சிறிபால டி சில்வாவிடம் கேட்டார்.

நான் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர். உலக சுகாதார நிறவனத்தின் தலைவர் ஆக இருந்தப்பதவிக்கு நான் பொருத்தமானவன் இல்லையா? என்று நிமல் சிறிபால டி சில்வா கேட்டார்.

ஆனால் சோதிடர் சொன்னார் உங்களால் டெங்குவை கட்டுப்படுத்த முடியாமல் போய் விட்டதாமே?

அது என்னுடைய தவறல்ல என்று நிமால் சிறிபால சொன்னார். சொல்லுங்கள் எனக்கு அந்தப் பதவி கிடைக்குமா இல்லையா என்று.

எனக்கு சொல்லக்கூடியதெல்லாம் ஒன்றுதான். அது அடுத்த பிரதமராக வரப்போபவர் தற்போதைய பிரதமரின் பெயரில் ஒரு பகுதியைக் கொண்டுள்ளார்.

உடனே கோபமுற்ற நிமல் சிறிபால டி சில்வா அப்போ நான் பிரதமராக வரப் போவதில்லையா என்று கோபத்துடன் கேட்டார்.

கோபப்படாதீர்கள் என்று சொன்ன சோதிடர் உங்கள் பெயரில் ஒரு பகுதியாகச் சிறி இல்லையா என்று கேட்டார்.

ஆம். அது நான் அடுத்த பிரதமராக வருவதைக் குறிக்கிறது அல்லவா என்று சொன்ன நிமால் சிறிபால டி சில்வா சந்தோஷத்துடன் சென்றார்.

**மைத்திரிபால சிறிசேன**

அடுத்து வந்தார் மைத்திரிபால சிறிசேன உங்களுக்கு ஏன் அந்தப்பதவி கிடைக்க வேண்டும் என நினைக்கிறீர்கள்? சோதிடர் அவரிடம் கேட்டார்.

நான் கட்சியின் பொதுச்செயலாளர். அத்தோடு மகிந்த மாமாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். எனவே அந்தப் பதவிக்கு நான் பொருத்தமில்லாதவனா? என்று மைத்திரிபால கேட்டார்.

ஆனால் அவர்கள் சொல்கிறார்கள் நீங்கள் அரிசி வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பதால் தங்களால் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கிறதாமே?

அது என்னுடைய தவறல்ல சொல்லுங்கள் அடுத்த பிரதமராக நான் வருவேனா இல்லையா?

எனக்குச் சொல்லக்கூடியதெல்லாம் அடுத்த பிரதமராக வருபவர் தற்போதைய பிரதமரின் பெயரில் ஒரு பகுதியையாவது கொண்டிருப்பவர் என்பதைத்தான் என்றார் சோதிடர்.

உடனே கோபமடைந்த மைத்திரிபால சிறிசேன அடுத்த பிரதமராக நான் வரமாட்டேனா என்றார்.

கோமடையாதீர்கள் என்று சொன்ன சோதிடர் ஏன் உங்கள் பெயரில் சிறி இல்லையா? எனக் கேட்டார்.

ஆம் அது நான் அடுத்தபிரதமராவதைக் காட்டுகிறதல்லவா என்று சொல்ல மைத்திரிபால சிறிசேன சந்தோசத்துடன் சென்றார்.

**எஸ்.பி.திஸநாயக்கா**

அடுத்து வந்தார் எஸ்.பி.திஸநாயக்கா. அடுத்த பிரதமராக நீங்கள் வரவேண்டும் என்று ஏன் நினைக்கிறீர்கள்? சோதிடர் வழமை போலக் கேட்டார்.

இவர்கள் எல்லோரிலும் அப்பதவிக்கு பொருத்தமானவர் நானே. முன்னர் நான் கட்சியின் பொதுச்செயலாளராகவும் இருந்திருக்கிறேன். மற்ற எல்லோரையும் விட நான் மகிந்த மாமாவின் நண்பனாக பாடசாலைக் காலத்தில் இருந்தே இருந்திருக்கிறேன். ஆக அப்பதவிக்கு நான் பொருத்தமானவனில்லையா?

ஆனால் சோதிடர் சொன்னார் நீங்கள் ஒரு முறை கட்சியை விட்டு விலகிச் சென்றிருக்கிறீர்கள். அது அவர்களுடைய அரசாங்கம் கவிழக் காரணமாக இருந்தது என்று சொல்கிறார்களே?

அந்த நேரத்தில் நான் செய்த மிகச்சரியான வேலை அது. சொல்லுங்கள் அடுத்த பிரதமராக நான் வருவேனா இல்லையா?

எனக்குச் சொல்லக் கூடியதெல்லாம் அடுத்து பிரதமராக வருபவர் தற்போதைய பிரதமரின் பெயரில் ஒரு பகுதியையாவது கொண்டிருப்பார் என்பதைத் தான் என்றார் சோதிடர்.

உடனே கோபமடைந்த எஸ்.பி.திஸநாயக்கா அடுத்த பிரதமராக நான் வரமாட்டேனா என்றார்.

கோபமடையாதீர்கள் என்று சொன்ன சோதிடர் ஏன் உங்கள் பெயரில் நாயக்க இல்லையா எனக் கேட்டார்.

ஆம் ஆம் இது நான் அடுத்த பிரதமராவதைக் காட்டுகிறது என்று சொல்ல எஸ்.பி.திஸநாயக்கா மிகச்சந்தோசத்துடன் சென்றார்.

**ரி.எம்.ஜயரத்ன**

அடுத்து வந்தார் ரி.எம். ஜயரத்ன. அடுத்த பிரதமராக நீங்கள் வரவேண்டும் என்று ஏன் நினைக்கிறீர்கள்? சோதிடர் வழமைபோல கேட்டார்.

கட்சியில்தற்போது உள்ளவர்களிலேயே மிகப் பழைய ஆள் நான்தான். அது மட்டுமல்லாமல் கடந்த முறை என்னைப் பிரதமராகத் தெரிவு செய்திருந்தனர். பதவியேற்பதற்காக நான் அதற்கான சூட்டைக் கூடத் தைத்திருந்தேன். ஆக நான் அப்பதவிக்கு பொருத்தமானவன் இல்லையா என்று கேட்டார் ரி.எம்.ஜயரத்ன.

ஆனால் சோதிடர் சொன்னார் ஒரு சந்தர்ப்பத்தில் நீங்கள் பச்சைக்கட்சியில் சேர இருந்தீர்களாமே?

அது பிரதமர் பதவியைக் குறி வைத்துள்ள ஏனையவர்களின் ஆதாரமில்லாத குற்றச்சாட்டு. நீங்கள் சொல்லுங்கள் அடுத்த பிரதமராக நான் ஆவேனா இல்லையா?

எனக்குச் சொல்லக்கூடியதெல்லாம் அடுத்த பிரதமராக வருபவர் தற்போதைய பிரதமரின் பெயரில் ஒரு பகுதியாவது கொண்டிருப்பார் என்பதைத் தான் என்றார் சோதிடர்.

உடனே கோபமடைந்த ரி.எம்.ஜயரத்ன அடுத்த பிரதமராக நான் வரமாட்டேனா என்றார்.

கோபமடையாதீர்கள் என்று சொன்ன சோதிடர் ஏன் உங்கள் பெயரில் ரட்ன இல்லையா எனக் கேட்டார்.

ஆம் அது நான் அடுத்த பிரதமராவதை அல்லவா காட்டுகிறது. என்று சொன்ன ரி.எம்.ஜயரத்ன சந்தோசத்துடன் சென்றார்.

நிமல் சிறிபால டி சில்வா, எஸ்.பி.திஸநாயக்கா, ரி.எம்.ஜயரத்ன என்று எல்லோரும் தாங்களே பிரதமர் என் சொல்லிக் கொண்டிருப்பதை கேட்டுக்கொண்டே சோதிடர் இடம் வந்து சேர்ந்தார் தற்போதைய பிரதமர் ரட்ண சிறி விக்கிரம நாயக்கா.

**ரட்ண சிறி**

அடுத்த பிரதமராக நீங்கள் வரவேண்டும் என்று ஏன் நினைக்கிறீர்கள் சோதிடர் வழமை போல கேட்டார்.

ஏற்கனவே நான் பிரதமராக பதவி வகித்து வருகிறேன். இந்தப்பதவியை வைத்துக் கொண்டு என்னை பாதுகாத்துக்கொள்வதற்காக எதுவுமே செய்ததில்லை என்றார் ரட்ண சிறி.

ஆனால் சோதிடர் சொன்னார் நீங்கள் ஓய்வு பெற்றுக்கொண்டு இன்னொருவருக்கு இந்த வாய்ப்பை கொடுக்கலாமே என்று மற்ற வர்கள் சொல்கிறார்களே?

நான் ஏன் ஓய்வு பெறவேண்டும். தேர்தல் ஆணையாளரே இன்னமும் ஓய்வுப்பெறவில்லை சிறிமாவோ இந்தப்பதவியை வகிக்கும் போது அவருக்கு என்னைவிட ஒரு வயது அதிகமாக இருந்தது என்று சொன்ன ரட்ண சிறி ஆனால் நான் கேள்விப்பட்டேன் நீங்கள் இங்கு பலருக்கு அவர்கள் தான் பிரதமராக வருவார்கள் என்று சொல்லியுள்ளீர்களாமே என்று கோபத்துடன் கேட்டார்.

கோபப்படாதீர்கள் என்று சொன்ன சோதிடர் நான் அவர்கள் எல்லோருக்கும் சொன்னதெல்லாம் பாதி உண்மைதான்.

அதென்ன பாதி உண்மை ரட்ணசிறி கேட்டார். அடுத்த பிரதமராக வருபவர் தற்போதைய பிரதமரின் பெயரில் ஒரு பகுதியேயாவது கொண்டிருப்பார் என்பதுதான்.

ஆனால் நானோ தற்போதைய பிரதமரின் முழுப்பெயரையும்கொண்டுள்ளேன் அல்லவா?

ஆம் அதனால் தான் நீங்கள் தான்... அடுத்த பிரதமர் சோதிடர் சொன்னார். ரட்ண சிறி விக்கிரமநாயக்க ஒரு புன் சிரிப்புடன் மகிழ்ச்சியாகச் சென்றார்.

# மக்குலம், கங்குலி அசத்தல் கொல்கத்தா ஆறுதல் வெற்றி

(கொல்கத்தா)

மக்குலம், கங்குலி ஜோடியின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் 8 அணிகள் மோதும் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று கொல்கத்தாவில் நடைபெற்ற லீக் சுற்றின் 54ஆவதும் இறுதியுமான போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

மும்பை இந்தியன்ஸ் அணி ஏற்கனவே அரையிறுதிக்கு முன்னேறியதுடன் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி அரையிறுதி வாய்ப்பை இழந்த நிலையில் (ஓட்ட விகித சராசரியில்) இப் போட்டியில் களம் இறங்கின இப் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் டெண்டுல்கர் ஓய்வெடுத்தமையால் அணித்தலைமைப் பொறுப்பு பிரவோவுக்கு வழங்கப்பட்டது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 133 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் திவாரி 37 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 46 ஓட்டங்களையும் ராயுடு 15 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 27 ஓட்டங்களையும் டுமினி 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஷேன் பொன்ட், முரளிகார்த்திக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் டின்டா, யுனாகட், மனோஜ் திவாரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 134 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி கங்குலி-மக்குலம் ஜோடியின் சிறப்பான ஆரம்பத்தின் மூலம் 17.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 135 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் மக்குலம் ஆட்டமிழக்காமல் 56 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 57 ஓட்டங்களையும் அணித்தலைவர் கங்குலி 36 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 42 ஓட்டங்களையும் டேவிட் ஹசி 14 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 20 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் சதீஸ் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இவ் வெற்றியின் மூலம் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி தான் விளையாடிய 14 ஆவது போட்டியில் 7ஆவது வெற்றியைப் பெற்று 14 புள்ளிகளுடன் தொடர்ந்து 6ஆவது இடத்தையே (ஓட்ட விகித சராசரியில்) பெற்றது.

இதேவேளை மும்பை இந்தியன்ஸ் அணி தான் விளையாடிய 14ஆவது லீக் போட்டியில் 4ஆவது தோல்வியைச் சந்தித்தது.

...நகர சபை, யாழ்ப்பாணம்,



# யாழ்.நகரில் அமைக்கப்பட்டிருந்த அங்காடிக் கடைகள் சேதமாக்கப்பட்டன

## திட்டமிட்ட செயல் என வியாபாரிகள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அங்காடிக் கடைகள் நேற்றிரவு சேதமாக்கப்பட்டதுடன் அங்கிருந்த பொருள்களும் எடுத்துச் செல்லப்பட்டதாக கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

யாழ்.மாநகர சபையின் உழவு இயந்திரத்தில் வந்த சிலரே இச் செயற்பாட்டில் ஈடுபட்டதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளார்கள். இதேவேளை தமது கடைகளை அகற்றுமாறு நேற்றுக் காலை மாநகர சபை முதல்வரிடமிருந்து உத்தரவு வந்ததாகவும் எனினும் முன்னாள் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவிடம் முறையிட்டதையடுத்து மாற்று ஒழுங்கு செய்யப்பட்டதும் அவ்விடத்திலிருந்து அங்காடிக் கடைகளை அகற்றுவது எனவும் இணக்கம் காணப்பட்டதாகவும் வியாபாரிகள் கூறினர்.

எனினும் அதிகாரிகளுக்குத் தெரிந்தோ தெரியாமலோ சிலர் நேற்றிரவு யாழ்.மாநகர சபையின் உழவு இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் மதுபோதையில் வந்து இச் செயற்பாட்டில் ஈடுபட்டதாக அவர்கள் குற்றஞ்சாட்டினர். (எ-1)

# அவுஸ்திரேலியத் தூதுவராக ஜி.ஏ.சந்திரசிறி நியமனம்!

## ஆளுநராக அங்கயன்?

(கொழும்பு)

வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிஅவுஸ்திரேலியத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளார்.

இதனையடுத்து வட மாகாண ஆளுநராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அங்கஜன் இராமநாதன் தெரிவு செய்யப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

தற்போது வட மாகாண ஆளுநராகக் கடமையாற்றும் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவராகச் செல்லவுள்ளதையடுத்து புதிய ஆளுநர் ஒருவர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

இதனையடுத்து ஆளுநர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு அங்கஜன் இராமநாதன் உட்பட சிலரின் பெயர் விபரங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் அங்கஜன் இராமநாதனை நியமிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (ச-5)

## பொன்சேகாவுக்கு எதிரான...

போதிலும் இராணுவச் சட்டத்தின் 57-வது பிரிவின்படி இராணுவத்தில் இருந்து விலகி ஆறு மாதங்களின் பின்னர் அவர் இராணுவச் சட்டத்திற்கு உட்பட்டவரல்ல எனவும் ஆறு மாதங்கள் கடந்த பின்னர் அவருக்கு எதிராக இராணுவச் சட்டத்தின்படி குற்றம் சுமத்த முடியாது எனவும் அரசகுலரத்ன குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இராணுவச் சட்டத்தின் பிரகாரம் ஒருவர் கைது செய்யப்பட்டால் 24 மணி நேரத்திற்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட வேண்டும்.

பொன்சேகாவுக்கு மூன்று மாதங்களின் பின்னரே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது எனவும் அரசகுலரத்ன சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து குற்றம் சுமத்தியவர்களின் தரப்பு வாதத்தை முன்வைப்பதற்காக இராணுவ நீதிமன்றம் இன்று கூடவுள்ளது.(ச-5,14)

## தமிழ் மக்க...

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, அண்மையில் நடைபெற்ற தேர்தல்களைத் தொடர்ந்து இலங்கையில் புதிய அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால் நோர்வேயின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படும் என்ற கருத்துக்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் தமிழ் மக்களின்பிரச்சினைகளுக்கு ஒரு அரசியல் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற,எமது கொள்கைகளில் மாற்றங்கள் இல்லை.

விடுதலைப்புலிகள் பலம் தற்போது முற்றாக இல்லாது போயுள்ளது. ஜனாதிபதி ஜனவரி மாதம் நடைபெற்ற தேர்தலிலும் தற்போது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் பெரும் வெற்றி பெற்றுள்ளார்.

நாம் முன்னர் ஜனாதிபதிக்குத் தெரிவித்த வாழ்த்துச் செய்தியில் கூடதமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண் டும் எனத் தெரிவித்திருந்தோம்.

அவ்வாறான நிலைமைகளில் நோர்வே தனது உதவிகளை வழங்கும் எனவும் தெரிவித்திருந்தோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## சபாநாயகரை...

தீர்மானித்துள்ளதாக இந்தச் சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவருக்கு அறிவித்துள்ள ஜனாதிபதி, புதிய அமைச்சரவையின் எண்ணிக்கையை 40 ற்குள் வரை யறுக்கலாம் என நம்பிக்கை வெளியிட்டதாகவும் கூறப்படுகின்றது.

பிரதி சபாநாயகராக பிரியங்கர ஜயரத்னவைத் தெரிவு செய்யவும் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியை சிறுபான்மையினர் ஒருவருக்கு வழங்க எண்ணியுள்ளதாகவும் ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரிடம் கூறியுள்ளார். (ச-3,5,14)

## மெராக் துறைமுகத்...

ஏற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நான் எங்கு கொண்டு செல்லப்படுகின்றேன் என எனக்குத் தெரியாது. ஆனால் இவ் விடத்தை விட்டுச் செல்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் என கப்பலிலிருந்து இறங்கிய ராஜ் (வயது-26) ஏ.எவ்.பி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தானிலிருந்து அவுஸ்திரேலியாவுக்குச் வருவோரின் தொகை அதிகரித்துள்ளதால் தற்காலிகமாக அகதி அந்தஸ்து வழங்கும் பணிகளை நிறுத்துவதாக அவுஸ்திரேலியா அறிவித்திருந்தது. தனக்கு தற்போதும் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வ விருப்பம். எனினும் அது சாத்தியமில்லை என லத்தீப் (வயது-21) தெரிவித்துள்ளார். (ச-5)

## பார்வதிஅம்மா திருப்பப்பட...

பாக தாம் எதுவுமே தெரிந்திருக்கவில்லை எனவும் அடுத்த தினம் பத்திரிகைளைப் பார்த்த பின்னரேயே தான் சம்பவம் தொடர்பாக அறிந்ததாகவும் தெரிவித்தார்.

எனினும் பார்வதிஅம்மாள் தமிழகத்தில் சிகிச்சை பெற விரும்புவாரானால் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் தொடர்பு கொள்ளுமிடத்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி உரிய அனுமதியைப் பெற்றுத் தான் வழங்கத் தயாராக இருப்பதாகவும் அங்கு கருணாநிதி தெரிவித்தார்.

எனினும் இந்த வெளியேற்றுச் சம்பவத்தின் பின்னணியிலும் பொலிஸார் குவிக்கப்பட்டு வை.கோ. விரட்டப்பட்ட சம்பவத்தின் பின்னணியிலும் கருணாநிதியே நேரடியாகத் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டிய மார்க்சிஸ்ட் கட்சி சட்டசபை உறுப்பினர்கள் அங்கிருந்து வெளிநடப்புச் செய்தனர். இதனால் தொடர்ச்சியாக தமிழக சட்டசபையில் நேற்று காரசாரமான வாக்குவாதங்களும் விவாதங்களும் இடம்பெற்றிருந்தன.

இதனிடையே சென்னை நகரப் பகுதியில் இன்று பல எதிர்ப்புப் போராட்டங்களும் இடம்பெற்றிருந்தன. சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் தமது விரிவுரைகளை முற்றாக இடைநிறுத்தியுள்ளனர்.

ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் வெளியே வந்து பிரதான நுழைவாயிலில் இருந்து அரசிற்கு எதிராகவும் கருணாநிதிக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர்.(ச-5)

## இனி எங்கள் அகராதியில்...

தலைப்புலிகளின் ஆதரவாளர்களும் பல்வேறு இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் போட்டி போடலாம்.

அனைவருமே ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அதற்கேற்ற முறையில் தேர்தல் விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

**கேள்வி:-** யார் நிஜமான வாக்காளர்கள் என்பது எப்படித் தெரியும்? இந்தத் தேர்தலில் கள்ள வாக்குக்கு வாய்ப்பிருக்கிறதே?

**பதில்:-**ஈழத் தமிழர்கள் அனைவருமே வாக்காளர்கள்தான். இதில் ஈழத் தலைவர்கள் அனைவருமே போட்டியிடப் போவதில்லை. ஆகவே போட்டியிடாத தலைவர்கள் இந்தத் தேர்தலை முறைப்படி நடத்த உதவுவார்கள்.

அடையாள அட்டை காண்பித்தே வாக்குகளைப் போட முடியும். எலெக்ரோனிக் வாக்குப் பதிவு அல்ல. அந்தந்த ஊரில் நாங்கள் நியமிக்கும் தேர்தல் அலுவலர்கள் முன்னிலையில் வாக்குகள் எண்ணப்படும். அனைத்துமே நியாயமான முறையில் நடத்தப்படும்.

**கேள்வி:-** நாடு கடந்த தமிழீழ அரசால் பெரிதாக எதையும் சாதிக்க முடியாது என்ற விமர்சனங்களும் கிளம்புகிறதே?

ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளே எம் மக்களை வழிநடத்திச் செல்லத் தகுதியானவர்கள். சர்வதேச நாடுகளுடனும் இன்னொரு அரசிடமும் பேச அவர்களுக்கு எல்லா உரிமையும் இருக்கிறது.

தாய்லாமாவுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வரும் நாடுகள், இந்தப் புதிய அரசாங்கப் பிரதிநிதிகளுடன் பேச ஏன் முன்வராது? ஆனால் ஆயுதப் போராட்டம் என்பதோ, வன்முறை வழியோ இனி எங்கள் அகராதியில் கிடையாது.

ஈழத் தமிழர்கள் வாழும் பல்வேறு நாடுகளின் சட்ட திட்டத்தை மதித்து செயல்படுவோம். சட்டவிரோதமாக எதையும் செய்ய மாட்டோம்.

**கேள்வி:-** நாடு கடந்த தமிழீழ அரசு எத்தகையதாக அமையும்?

**பதில்:-** நடக்கிற தேர்தலில் இளைஞர்களையும் பெண்களையும் அதிக அளவு போட்டியிடக் கோரி வலியுறுத்துவோம். ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்களை எடுக்கிற அரசாகவும் மதச் சார்பு அற்றதாகவும் நாடு கடந்த தமிழீழ அரசு அமையும். (ச-5)


# தொழிற் பயிற்சிகள்



- றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
- Mobile Phone Repairing
- ஏயர் கொண்டிசனிங்



பயிற்சிகள் ஆரம்பம் : 24.04.2010

குறிப்பு: சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

விபரங்களிற்கு

JAFFNA TECHNICAL INSTITUTE

இல.45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 071 8561654, 077 9254078


குறிப்பு: Mobile Phone Circuit Book, Transistor Data Book, IC Book விற்பனைக்குண்டு.

(க-047)


# மரண அறிவித்தல்

## பொன்னுச்சாமி தங்கராசா

(வவுனியா சிறி முருகானந்தபுவன், கண்ணகி போசனசாலை, நாகபூசணி உணவகம், யாழ். ஆனந்தா போசனசாலை ஆகியவற்றின் முன்னாள் உரிமையாளர்)



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்டிருந்த தங்கராசா 2010.04.15 வியாழக்கிழமை கொழும்பில் இறையடி இணைந்தார்.

இவர் அமரத்துவமடைந்த பொன்னுச்சாமி சின்னாச்சி தம்பதியினரின் புதல்வரும் சண்டிலிப்பாய் அன்னலட்சுமியின் கணவரும், அமரர் சீதாலட்சுமி, பொன்னம்மா, அமரர் இராசமணி, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், அமரர் மதியழகன் (ஜேர்மனி), அன்பழகன் (பிரான்ஸ்), மதிவதனி (இங்கிலாந்து), சத்தியவதனி (இங்கிலாந்து), சிறிவதனி (இங்கிலாந்து), சசிவதனி (சுவிஸ்சர்லாந்து) ஆகியோரின் தந்தையும், அமரர்களான கந்தையா, செல்லத்துரை, ஐயம்பிள்ளை மற்றும் நவரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் பங்கயற்செல்வி (ஜேர்மனி), சத்திதேவி (பிரான்ஸ்), இராசேந்திரம் (இங்கிலாந்து), மனோகரன் (இங்கிலாந்து), சுதேஸ்வரன் (இங்கிலாந்து), ஜெகதீசன் (சுவிஸ்சர்லாந்து) ஆகியோரின் மாமனாரும், மதியூசன், அனுஷன், மதுஷா, அபினாஸ், ஆகாஸ், அஸ்வின், அனுயா, விதுஷன், தனுஷன், சாத்வீகா, சாரங்கா, மதுஷா, கனிஸ்ரா, மதியூஷன், சாயூ, சயூன் ஆகியோரின் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 2010.04.21 புதன் பகல் 1.30 மணியளவில் பொரளை ஜெயரத்தின மலர்ச்சாலையில் ஆரம்பமாகி 3.00 மணிக்குக் கனத்தை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

தகவல் த. அன்னலட்சுமி (மனைவி)
20, சீறியா வீதி,
கொழும்பு-06

தொலைபேசி: 011-2595549

(1219)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.